சித்தாந்தம்.
V. 5. No. 2
Feb. 1932

3
187/63

952

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 2.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ரு | பிரசோற்பத்தி ஆண்டு மாசித் திங்கள்<br>1932 பிப்ரவரி | இதழ் உ. |
|---|---|---|

19 FEB 1932

பக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| திருக்கோணம் | ... | ... | ... | கூக |
| வெளிவராத திருவாவடுதுறை சுந்தரர் கல்வெட்டு | | | ... | கூஅ |
| திருவகுப்பு | ... | ... | ... | ௫௦ |
| பஞ்சாக்கரமாலை | ... | ... | ... | ௫௭ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.
தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

# சைவ சித்தாந்த மகா சமாஜ அறிக்கைகள்

1. இம்மாத இதழில் இதுவரை அச்சில் வெளிவராத "பஞ்சாக்கரமாலை" என்ற உபதேச நூல் மூலமும் பழைய உரையுமாக வெளியிடப்படுகின்றது. இதன் பிரதியை நமக்கு நல்கியவர் இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரைத் தோன்றலும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியின் உதவி ஆசிரியருமாகிய சைவத்திருவாளர் - சோமசுந்தர தேசிகர் அவர்களே. அன்னாருடைய உதவிக்கு இச்சமாஜத்தினரும் சைவ உலகத்தினரும் பெரு நன்றியுடையவர்களா யிருக்கின்றனர்.

2. மேற்கூறிய நூல் "தொடரும்" எனக் குறிக்கப்படாமல் ஒரே யிதழில் வெளிவந்ததால் "திருவாசகம் உரை" முற்கூறியபடி இவ்விதழில் வெளிவரமுடியாமற் போயிற்று. மேலும் ஷை உரை வெளியிடுவதைப்பற்றிய முடிவான ஏற்பாடுகளைத் தீர்மானிப்பதற்கு சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சமாஜக் காரியாலயத்தில் 1932ஆம் பிப்ரவரி௴ 21உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்குக் கூடும். அன்றையதினம் கூட்ட நிறைவெண் (Quorum) இல்லாவிடில் அக்கூட்டம் 44-வது விதியின்படி அடுத்தநாள் மாலை அதேயிடத்தில் 5-30 மணிக்குக் கூடி முடிவுபெறும்.

3. சைவ சமயச் சார்புடைய கூட்டங்களைப்பற்றிய எதிர்கால அறிக்கைகள், நடந்த கூட்டங்களின் நிகழ்ச்சி வரலாறுகள் முதலியவற்றை ஒவ்வோர் இங்கிலீஷ் மாதமும் 25-ம் தேதிக்குள் அன்பர்கள் "திரு. T. S. வேலாயுதம்பிள்ளையவர்கள், பி. ஏ., எல். டி., தலைமையாசிரியர், போர்டு ஹைஸ்கூல், குடவாயில், Kodavasal P. O.," என்ற விலாசத்துக்கு அனுப்பிவிட வேண்டுகிறோம். அவைகளைத் தொகுத்து அடுத்த மாத இதழில் திரு. பிள்ளையவர்கள் வெளியிடுவார்கள்.

4. வரும் மாசி௴ உஉ (14-2-1932) ஞாயிற்றுக்கிழமையன்று (மாயவரம் - திருவாரூர் லைனிலுள்ள பேரளம் ஜங்ஷனிலிருந்து காரைக்கால் செல்லும் பாதையிலுள்ள) திருநள்ளாறு என்ற பாடல் பெற்ற சிவஸ்தலத்தில் சனிப்பெயர்ச்சி விழா மிகச் சிறப்பாக நடைபெறும். திருநள்ளாறு திருஞானசம்பந்தருடைய பச்சைப்பதிகம் பெற்றதும், நளனால் பூசிக்கப்பெற்றதும், சப்தவிடங்கத்தில் ஒன்றையுடையதுமாகிய சிறப்புவாய்ந்த தலம். இரண்டரை ஆண்டுகட்கொருமுறை சனிக்கிரகம் ஒரு இராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் பெயரும் பெயர்ச்சி விழா இவ்வூரில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை யொட்டிவரும் பெருந்திரளான சைவ நன்மக்கட்குச் சமய போதனை செய்யுநிமித்தம் நமது சமாஜத்தின் விசேஷ மகாநாடு ஒன்று ஆங்கு அன்றையதினம் கூடும். அம்மகாநாட்டில் தொண்டு புரிய விரும்பும் அன்பர்கட்கு இருப்பிடம், உணவு முதலிய வசதிகள் இலவசமாக அளிக்கப்படும். அவ்வன்பர்கள் "திரு. செ. பழனியப்ப பிள்ளையவர்கள், வடக்கு வீதி, திருநள்ளாறு" என்ற விலாசத்துக்கு உடனே தெரிவிக்க வேண்டும்.

5. நமது பத்திரிகையைப் பெறும் அன்பர்களுடைய தபால் விலாசங்களை அச்சிட ஏற்பாடு செய்வதால், ஒவ்வொருவரும் காலையே தத்தம் விலாசத்தைத் திருத்தமாகவும் தெளிவாகவும் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம்.

6. 31-1-1932 வரை கொடுக்கப்பட்டுள்ள தேவாரப் பரிசுப்போட்டி டிக்கட்டுகள் 105, தலப்படப் போட்டி டிக்கட்டுகள் 18. அன்பர்கள் விரைவாக ஆதரவு புரிந்து டிக்கட்டுகளைப் பெறுதல் நலம்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—2—1932

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

19 FEB 1932



# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"

| மலர் ௫ | பிரசோற்பத்தி ஆண்டு மாசித் திங்கள்<br>1932ஆம் பிப்ரவரி௴ | இதழ் ௨ |
|---|---|---|


## திருக்கோகர்ணம்

[பத்திராசிரியர்]

திருச்சிற்றம்பலம்

"பேதைமட மங்கையொரு பங்கிடமி குத்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலெ ழுந்தவிட முண்டசிவன் வாழுமிடமாம்
மாதரொடு மாடவர்கள் வந்தடியி றைஞ்சிநிறை மாமலர்கள் தூய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல் கின்றவளர் கோகரணமே."

—சம்பந்தர் தேவாரம்.

நமது சமாஜத்தின் சார்பில் சென்ற கிறிஸ்மஸ் விடுமுறையில் திருக்கோகர்ண யாத்திரை யொன்று நிகழ்ந்தது நேயர்கட்குத் தெரிந்த விஷயம். இந்த யாத்திரையில் கலந்து கொள்வதாகத் தெரிவித்த அன்பர்கள் பலர்; கலந்து கொண்டவர்கள் சிலரே. யாத்திரை செய்யாதவர்கள் பலர் யாத்திரையின் விவரங்களை நமது பத்திரிகையின் மூலம் தெரிவிக்கவேண்டுமென்று நம்மைப் பன்முறை கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிக் கீழ்வரும் விஷயங்களை மிக மகிழ்ச்சியோடு குறிக்கிறோம்.

சென்னையிலிருந்து திருக்கோகர்ணம் செல்வதற்கு இரண்டு வழிகளுண்டு. ஒன்று பெங்களூர் சென்று அங்கிருந்து ரயில் மாறி பூனாவுக்குச் செல்லும் பாதையில் ஹூப்ளி ஸ்டேஷனை யடைதல்; மற்றொன்று பம்பாய்ப் பாதையிலுள்ள குண்டக்கல் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கிருந்து ரயில் மாறி மர்மகோவா செல்லும் பாதையில் ஹூப்ளி ஸ்டேஷனை யடைதல். ஹூப்ளி ஸ்டேஷனிலிருந்து திருக்கோகர்ணத்துக்கு மோட்டார் பஸ்கள்

உண்டு. தினந்தோறும் ஐந்து பஸ்கள் போகவர இருக்கின்றன. சாதாரணமாக ஹுப்ளியில் காலை 9 அல்லது 10 மணிக்குள் புறப்பட்டால் மாலை 5 அல்லது 6 மணிக்குத் திருக்கோகர்ணம் செல்லலாம். இராக்காலத்தில் மோட்டார்கள் செல்வதில்லை. ஹுப்ளிக்கும் திருக்கோகர்ணத்துக்கும் 103 மைல் தூரம். இடையே சில ஊர்களும், பெரும்பாலும் தேக்குமரக் காடுகளும், மலைச்சாரல்களுமாக இயற்கை யழகு வாய்ந்த காட்சிகள் பலவுள்ளன. மோட்டார் பஸ்கள் பெரும்பாலும் எங்கும் நில்லாமல் நேராகச் செல்வதில்லை. கால்காட்கி, எல்லாபூர், சுங்க்சால், அங்கோலா என்ற நான்கு இடங்களில் அநாவசியமாக நெடு நேரம் நின்று தான் செல்கின்றன. எல்லாபூருக்கும் சுங்க்சாலுக்கும் இடையேதான் பல மலைச்சரிவுகளைக் கடக்கின்ற பகுதி (Ghat section) உள்ளது. இந்தப் பகுதியில்தான் அடர்ந்த காடுகளும், மலைச்சரிவுகளும், நீர்வீழ்ச்சிகள் ஆறுகள் முதலியனவும் கண்ணைக் கவர்கின்றன. ஏனைய பகுதிகளில் தேக்குமரக் காட்டைத் தவிர வேறொன்றையும் விசேஷமாகக் காணவியலாது. சாதாரண காலத்தில் ஹுப்ளியிலிருந்து திருக்கோகர்ணம் செல்வதற்கு ஆள் ஒன்றுக்கு மோட்டார் பஸ் கட்டணம் இரண்டரை ரூபாய் ஆகின்றது. சிவராத்திரி விழாவில் ஐந்து ரூபாய் வரை இக்கட்டணம் உயர்கின்றது. ஹுப்ளியிலிருந்து புறப்படும் மோட்டார் பஸ்கள் பெரும்பாலும் அங்கோலாவுக்குச் சென்று அங்கிருந்து கார்வார் என்றவூருக்குச் செல்கின்றன. திருக்கோகர்ண பிரயாணிகளை பஸ்காரர்கள் கோகர்ணம் செல்லும் பஸ்களுக்கு மாற்றி ஒப்புவிக்கிறார்கள். பிரயாணிகள் பிரத்தியேகமாகக் கட்டணம் ஒன்றும் செலுத்த வேண்டியதில்லை. அங்கோலாவுக்கும் கோகர்ணத்துக்கும் ஏறக்குறைய பதினாறு மைல் தூரமுளது. நடுவழியில் சமுத்திரக் கழி நீரைக்கடந்து செல்லவேண்டும். அதற்கு மோட்டார் பஸ்களையே ஏற்றி இக்கரையிலிருந்து அக்கரைக்குக்கொண்டு செல்லும் மிதவைகள் (ferries) உள்ளன. படகுகளும் தோணிகளுமுள்ளன. கோகர்ணத்துக்குப் போகும்போது ஒரு வழியும், மீண்டும் கோகர்ணத்திலிருந்து அங்கோலாவுக்குத் திரும்பும்போது மற்றொரு வழியுமுள்ளன. போகும்போது உப்பங்கழி சிறியதாகவும் பள்ளமின்றியும் உள்ளது. திரும்பும் வழியிலுள்ள கழி மிகப் பெரியதாயும் மிக ஆழமாயுமுள்ளது. மர்மகோவாவிலிருந்து வாரத்துக் கொருமுறை கப்பலேறிக் கோகர்ணத்துக்கு நான்கு மைல் தூரத்திலுள்ள ஓரிடத்தில் நடுக்கடலில் இறங்கிப் படகு மூலம் கோகர்ணம் வருவதுமுண்டு. ஹுப்ளியிலிருந்து மோட்டார் பஸ்கள் ஏற்பட்ட நாள்முதல் இந்த வழியாக ஒருவரும் வாவிரும்புவதில்லையெனத் தெரிகிறது.

திருக்கோகர்ணம் மேற்குத்திசையில் மேற்கு சமுத்திரமாகிய அராபிக் கடலினாலும் ஏனைய திசைகளில் அக்கடலின் உட்போக்காகிய கழிகளினாலும் (backwaters) சூழப்பட்ட ஒரு தீவிலிருக்கிறது. திருக்கோகர்ணம் என்ற தலம் பம்பாய் இராஜ தானியைச் சேர்ந்த வடகன்னடம் ஜில்லாவில் ஒரு பட்டினம். இப்பட்டினத்திலுள்ளோர் கன்னட பாஷை பேசுகின்ற திராவிட [illegible] மக்கள். திருக்கோயில் சமுத்திரக் கரைக்குக் கால்

18163



மைல் கிழக்கே யுள்ளது. கோயில் வாயிற்படியிலிருந்து சமுத்திரம் நன்றாய்த் தெரியும். திருக்கோயிலுக்குக் கிழக்கே சில குறுகிய தெருக்களைக் கடந்து சென்றால் திருக்குளத்தை யடையலாம்.

திருக்கோயிலுக் கெதிரிலுள்ள சமுத்திரக் கரையிலிருக்கும் முழுகும் துறை (ஸ்நான கடம்) அழகாகவுள்ளது. வட புறத்திலும் தென்புறத்திலும் இரண்டு மலைகள் கடலுக்குள் நீண்டு சென்று இரண்டு கைகளையும் வளைத்து நிற்பது போன்ற அழகிய காட்சி பெரியதொரு இன்பத்தைத் தருகிறது. எதிரில் பல கற்பாறைகள் சமுத்திரத்தில் பாதி முழுகியும் முழுகாமலு மிருக்கும் காட்சியும் அழகாகவுள்ளது. கடற்கரையிலுள்ள மணலும் நடக்கும்போது ஒருவித ஒலியைக் கிளப்பும் தன்மையுடையதாயிருக்கிறது.

நந்தமிழ் நாட்டிலுள்ள பிரமாண்டமான திருக்கோயில்களை நோக்கத் திருக்கோகர்ணக் கோயில் மிகச் சிறிதே யாகும். அக்கோயில்களின் முதற் பிரகாரத்தின் அளவுக்கும் சிறியதென்றே இதைக் கூறவேண்டும். திருக்கோயிலும் ஆடம்பரங்கள் ஆரவாரங்கள் முதலியனவின்றி மிகவும் எளிய அமைப்பும் எளிய நடைமுறையு முடையதாயிருக்கின்றது. நமது நாட்டுக் கோயில்களிலுள்ளன போன்ற பெரிய கோபுரம், பல மண்டபங்கள், துவஜஸ்தம்பம் என்ற கொடி மரம், மஹா மண்டபத்திலும் ஏனைய மண்டபங்களிலும் நந்தி பலி பீடங்கள், பரிவார தேவதைகள் முதலியவைகளை இக்கோயிலில் காண முடியாது. கோபுர வாயிற்படியும் கதவுகளுமுண்டு; மணிக் கோபுரம் ஒன்று மில்லை. "கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்" என்று அப்பர் சுவாமிகள் கூறியது இறைவன் சந்நிதிக்கு மேலுள்ள ஸ்தூபியையே குறிக்கவேண்டும். கோபுர வாயிற்படிக்குள் நுழைந்தால் பெரியதொரு துவஜஸ்தம்பத்தையும் பெரியதொரு நந்தியையும் பலிபீடத்தையும் மற்ற ஆலயங்களிற் காண்பதுபோல் இவ்வாலயத்திற் காண முடியாது. கோயிற்புற மதிலுக்குள் ஒரு சிறிய திறந்த வெளியான தளவரிசை செய்யப் பெற்ற பிராகாரம் மட்டும் உண்டு. அந்தப் பிராகாரத்தில் ஒரு இலிங்கம், தேவஸ்தான ஆபீசு, பண்டக சாலை, மடைப்பள்ளி ஆகிய இவைகளைத் தவிர வேறு எவ்வித பரிவார தேவதைகள் சந்நிதியும் கிடையாது. பிரகாரத்தை வலம் வந்து உள்ளே நுழைந்தால் அந்திராளத்தையும் அதில் ஒரு நந்தியையும் அந்திராளத்தைக் கடந்து உட்சென்றால் கருப்பக்கிரகத்தையும் அடையலாம். கருப்பக் கிரகத்தில் ஏககாலத்தில் நாற்பது அல்லது ஐம்பது அன்பர்கள் இருக்கலாம். அதற்கு மேற்பட்டால் ஒருவரோடொருவர் இடியுண்டு கஷ்டப்பட வேண்டிவரும். கருப்பக்கிரகத்தில் இறைவன் திருவுருவத்துக்குப் பின்புறமாக ஒரு பேழையில் உத்ஸவ விக்கிரகங்கள் இரண்டு உள்ளன. ஒன்று சுவர்ணத்தினாலும் மற்றொன்று வெள்ளியினாலும் செய்யப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவைகள் பீடம் பிரபையுட்பட ஒரு முழம் உயரமுள்ளவைகளே. ஒவ்வொரு சோமவாரத்திலும் வேறு விசேஷ விழாக்காலங்களிலும் இவற்றுள்

ஒன்றைத் திருவீதி வலம் வரச்செய்வது வழக்கம். கோயில் அர்ச்சகர் தமது மார்பிலே சாத்தியும் சிரசிலே தாங்கியும் வந்து சிவிகையிலாவது, கேடயம், ரதம் முதலிய ஊர்திகளிலாவது வைத்து உத்ஸவம் செய்விப்பதே இவ்வூர் வழக்கமாயிருக்கிறது. இவ்வுத்ஸவ விக்ரஹங்கட்கு விசேஷ ஆபரணாதி புஷ்பாலங்காரங்கள் நடப்பதில்லை. அறிஞர்கள் எல்லாம் மெச்சக்கூடிய எளிய முறையிலேயே வழிபாடுகள் நிகழ்கின்றன.

திருக்கோகர்ணத்தைப்பற்றி நாம் மிக முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அதாவது அத்தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானை நாமெல்லோரும் நேரில் தொட்டு அபிஷேகம் செய்து அர்ச்சனை புரிந்து வழிபடலாம். தேவாரப்பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் நாமறிந்த மட்டில், திருக்கோகர்ணம் ஒன்றில் தான் நாமே நேரில் இறைவனை வழிபடும் உரிமை நமக்குண்டு.

திருக்கோகர்ணமுடைய சிவபெருமான் ஆங்கு உருக்கொண்டுள்ள திருமேனியைப்பற்றிச் சிறிது புகல்வாம். கருப்பக் கிரகத்தின் மத்தியில் மூன்றடிக்கு மூன்றடி சதுரமுள்ள ஒரு சிறு மேடை மூன்றங்குல உயரமுடையதாயிருக்கிறது. அதின் மேலே இரண்டடிக்கு இரண்டடி வட்டமாக இரண்டங்குலம் உயரமுடைய (அதாவது மேடைக்கு மேலே ஒரு சிறு மேடைபோல) ஒரு இலிங்கம் உளது. இதன் தென்கிழக்குப் பாகத்தில் ஒரு வெடிப்பும் அதில் தங்கரேகையும் உள்ளன. இதைச் சுவர்ண ரேகையுள்ள சாளக்கிராம பீடம் என்று கோயில் அதிகாரிகள் கூறுகின்றார்கள். இதன் மத்தியில் ஒரு சாண் அளவு (அதாவது விரல்களும் உள்ளங்கையும் சேர்ந்த ஹஸ்தம் எனும் பகுதியை வைத்தால் எவ்வளவிருக்குமோ அவ்வளவு விஸ்தீரணம்) குடைந்த பள்ளமாக இரண்டங்குலம் ஆழமுள்ள குழி ஒன்று இருக்கிறது. இந்தக் குழி வெள்ளை நிறமாகவுள்ளது. இந்தக் குழியின் மத்தியில் தான், வலது கைப்பெரு விரலளவுள்ள, பசுவின் காதைப் போன்ற உருவமுள்ள, மரகத ரத்தினமாக ஒளி வீசுகின்ற கோகர்ண முடையாராகிய மஹாபலேசுவரர் வீற்றிருக்கின்றார். அபிஷேக நீரை வெள்ளைக் குழியிலிருந்து அள்ளி யெடுத்துவிட்டு, கற்பூர ஆரத்தி செய்யும்போதுதான் மஹாபலேசுவரர் திருமேனியைக் காணவியலும். அபிஷேகம் செய்யும்போது விரலினால் தொட்டு அறியலாமே யொழியக் கண்ணால் காணமுடியாது. கற்பூர ஆரத்தி செய்யுங்காலத்தில் சிதம்பரத்தில் இரத்தின சபாபதி விக்ரஹம் ஒளி வீசுவதுபோல் இவ்விடத்திலும் மஹாபலேசுவரர் ஜ்வலிப்பதைக் காணலாம். மஹாபலேசுரர் சந்நிதி மேற்கு முகமாயுள்ளது.

கருப்பக் கிரகத்துக்கு வடபுறத்தில் ஒரு சிறு அறையில் விநாயகர் உருவமும் தென் புறத்துச் சிறு அறையில் மஹிஷாசுரமர்த்தனி உருவமும் உள்ளன. இவைகளைத் தொட்டு பூசை செய்யும் உரிமை கோயில் அர்ச்சகர்க்கேயுண்டு. இவ்விரண்டு உருவங்களும் மஹா பலேசுவரரும் அவர் எதிரில் அந்திராளத்திலுள்ள நந்திகேசுவரரும் இரண்டு உத்ஸவ மூர்த்திகளும், வெளிப் பிரகாரத்தில் ஒரு இலிங்கமும் தவிர வேறு எந்த மூர்த்தியும் சந்நிதியும் இந்தக் கோயிலிலில்லை.



ஆனால் இந்தக் கோயிலின் புறமதிலுக்கு வெளியே வடபுறத்தில் வீதியில் தரை மட்டத்துக்குக் கீழே இரண்டு இலிங்கங்களும், கீழ்ப் புறத்தில் பார்வதியம்மன் கோயில் ஒன்றும், தென் கிழக்கில் விநாயகர் கோயில் ஒன்றும் அதற்கருகில் இராவணன் அநுட்டானம் செய்த தீர்த்தம் ஒன்றும் உள்ளன. ஆனால் இவைகட்கும் மஹாபலேசுவரர் கோயிலுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இவைகளுள் விநாயகர் ஆலயத்தில் மட்டும் எல்லோரும் பூஜை செய்கிறார்கள். இந்த விநாயகர்தான் இராவணன் கையிலிருந்து வாங்கி மஹாபலேசுவரரைப் பிரதிஷ்டை செய்தவராகக் கூறப்படுகின்றார். இவரது உருவம் மிக அழகாக உள்ளது. சதுர்புஜங்களின்றி இரண்டு கைகளோடு மட்டும் பெரிய தொந்தியும் யானை முகமும் உடையராய், நின்ற திருக்கோலமாக இவ்விநாயகர் காட்சி தருகிறார். இவர் தலையில் கிரீடமில்லை; யானைத் தலைபோலவே இவரது தலையும் குழைவாகவுள்ளது. இதன் மத்தியில் இரண்டங்குலக் குழியொன்றுளது. இது இராவணன் குட்டியதால் ஏற்பட்ட குழியாம். இவ்விநாயகர் திருவுருவத்தை ஒருமுறை பார்த்தாலும் அதன் அழகு என்றென்றும் நினைக்குந்தோறும் இன்பம் பயக்கின்றது.

இந்தத் தலத்தில் மஹாபலேசுவரரைத் தவிர மற்ற மூர்த்திகளின் கோயில்கள் அமைப்பு முதலியவற்றை நோக்குமிடத்து அவைகள் சமீபகாலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டனவேயென்று கூறாமலிருக்க முடியாது.

திருக்கோகர்ணத்தை நினைக்கும்போது திருப்பெருந்துறையின் ஞாபகம் வருகிறது. திருப்பெருந் துறையிலும் நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் பரிவார தேவதை மிகுதி முதலியன வின்றி எளிமை பற்றிய உயரிய முறையில் கோயிலின் அமைப்பு திகழ்கின்றது. அத்தகைய உயரிய அமைப்போடு கூட, சைவ நன்மக்களனைவரும் நேரில் (அதாவது இடையே யுள்ள அருச்சகர், சிவாசாரியர் முதலியோரின்றி) திருவுருவத்தைத் தொட்டுப் பூசை செய்யும் உயரிய வழிபாட்டு முறையும் திருக்கோகர்ணத்திலுள்ளது.

கோகர்ணத்தில் தங்குவதற்கும் கோயில் வழிபாடு செய்வதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்குக் கோகர்ணத்தின் எல்லையிலேயே மோட்டாரைச் சுற்றித் திரளாகப் பண்டாக்கள் எனப்படும் பிராமணர்கள் வந்து சூழ்ந்து கொள்ளுகிறார்கள். இடவசதிகளும் உணவு வசதிகளும் நிரம்ப வுண்டு. பெரிய விழாக் காலங்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் தங்குவதற்கான சுகாதாரவசதிகளுமுள்ளன.

திருக்கோகர்ணத்தில் மகா சிவராத்திரி விழா மிகவும் விசேஷம். சிவராத்திரி புராணத்தில் சுகுமார சரித்திரம் முதலியவற்றால் இது நன்கு விளங்கும். இவ்வாண்டில் மகா சிவராத்திரி நாளது மாசிமீ ௨௨ (5-3-1932) வருகிறது. இதைக் கண்ணுறும் அன்பர்களை மகா சிவராத்திரிக்குத் திருக்கோகர்ணம் சென்றோ, இன்றேல் மஹாபலேசுவரரை நினைந்தோ வழிபட்டுத் திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

# வெளிவராத திருநாவலூரிலுள்ள சுந்தரர் கல்வெட்டு

[தி. கு. கி. நாராயணசாமி, கிழக்கு மருதூர்]

(திருநாம நல்லூர் P. O., விழுப்புரம் R. M. S. வழி)

திருநாவலூரைப்பற்றித் திருமுறையில் நின்று சரித்திரத் துணையுடன் சித்தாந்தம் மலர் 3-லும் முக்கியமான சில கல்வெட்டுகளை நவசக்தியிலும் எழுதியிருக்கிறேன். திருநாவலூர், சுந்தரர் பிறப்பிடம். இது கடலூருக்கு 26 மைல் மேற்கிலும் அப்பர் அவதரித்த திருவாமூருக்கு 6 மைல் மேற்கிலும் உள்ளதாகும். விழுப்புரம் திருச்சி இருப்புவழியிலுள்ள இருந்தை நிலயத்திற்கு 2 மைல் கிழக்கு. திருநாம நல்லூர் என வழங்கும் இப்பதியில் திருமால், சுந்தரர் கோயில்களுடன் சிவன் கோயிலு முள்ளது. இக்கோயிலைத் திருப்பணி செய்தவர்கள் தனவணிக நாட்டவரே யாவர். அவர்கள் தாது ௵ மாசியீ திருப்பணியை ஆரம்பித்து விரோதி ௵ (1891) குடமுழுக்கு விழா இயற்றினர். இவற்றை எனக்கு அறிவித்தவர் களத்தூர் திருவம்பல நயினர் மகனார் பொன்னுசாமி நாயினர் ஆவர். இவர் இக்கோயிலில் அறுபத்துமூவர், எழுந்தருளும் நால்வர் திருமேனி இன்னபல சமைத்தவர். இக்கோயில் கிணற்றுக்கு அருகில் அகத்தீஸ்வரர் என்ற ஆளுடையாரும், இது கால நவக்கிரகத்தின் பக்கலில் அமைக்கப்பட்டுளது. கலிநரீஸ்வரர் என்ற இலிங்கம் பூந்தோட்டத்திற்குச் செல்லும் வழியிலிருந்ததென்றும், (இது உள் சுற்றில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள பெரிய இலிங்கம்) இப்பொழுதுள்ள சுந்தரர் கோயில் கோயிலின் சுற்று மதிலின் வடகிழக்கு மூலையில் இப்பொழுது அமைந்துள்ள அளவினும் பெரிய அளவினதாக இருந்தமையும் தெரிவித்து, இப்பொழுது பூந்தோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்திலுள்ள இதன் பழைய அடிப்படையையும் காட்டினார்கள். இது நிற்க. இக்கோயில் கல்வெட்டுகளை 1902௵ அரசாங்க சாஸன இலாகாகாரரான, து. அ. கோபிநாதராவ் அவர்கள் பார்வையிட்டு 57 கல்வெட்டு படி எடுத்து அவற்றின் குறிப்பை 1902௵ அறிக்கையில் வெளியிட்டுள்ளார்கள். (See. Ep. report ot 1902 No 325 to 380) அவ்வாண்டு அறிக்கையில் தனவணிகர் செய்த பணியில் புரிந்த திருவிளையாடலைக் குறித்த இரங்கலுரை பின் வருமாறு வருகிறது:—

I regret to say that the Kalinarisvara temple at Tirunamanallur is not the only instance of wanton destruction of ancient monuments which I have to report. * * * I hope that the Government will agree with me that, in the interest of historical research, these misdirected efforts must be put a stop to. * * * *Quod non fecere barbari fecere, barberim.* What the Musalmans did not destroy is being demolished by pious Hindus!



எனது நண்பர் கோவை ராவ்சாகிப் C. M. இராமச்சந்திரன் செட்டியார் B. A., B. L., அவர்கள் செந்தமிழ்ச் செல்வி கூ-ம் சிலம்பு சு-வது பரல் உ௭௩-ம் பக்கத்தில் நால்வர்களும் கல்வெட்டுகளும் என்ற தலைப்பின் கீழ் இவ்வூர் பற்றிப் பின் வருமாறு வரைகிறார் :

சுந்தரர் பிறந்த ஊர், திருநாவலூர். தற்போது அதைத் திருநாம நல்லூர் என்று வழங்குகிறார்கள். இந்த ஊர் ஆலயத்தில் 57 கல்வெட்டுகள் உண்டு. அவைகளில் சில வெகு பழயவை. பராந்தகன் காலத்ததும் உண்டு. அப்படியிருந்தும் சுந்தரரைப்பற்றிய விவரம் காணோம்.

இவ்வரிகளைக்கண்ட நாள் முதல் இக்கல்வெட்டுகளைச்சோதிக்க எண்ணி, கல்வெட்டுக் குறிப்புகளாகிய எண், கல்வெட்டினிடம், பரம்பரை, அரசன், காலம், குறிப்பு முதலியன தனித்தனி கார்டுகளின் தலைப்பில் எழுதிக்கொண்டு சோதித்து மூலத்தை என்சியவிடத்தில் எழுதி வந்தேன். இவ்விதம் சுவருகளைத் தடவிக்கொண்டு வரும்போது பெருமாள் கோயில் மடப்பள்ளி சுவரில் கண்ணப்பநாயனார் கற்படிமம் கிடைத்தது. இது தாரேச்சர ஆலய பெரிய புராணப் படிமங்களில் இல்லாததால் இது எவ்வளவு முக்கியமானது என்பதைச் சிந்திக்க! வேறு சில வெளிவராக் கல்வெட்டுகளும் கிடைத்தன. பிறகு சுந்தரர் கோயிலைச் சோதித்தபோது கட்டிடத்தில் தரைமட்டம் (Flooring level) பிரிக்கும் படையில் (leeyer) ஒரே வரியில் ஒரே அகலம்வாய்ந்த கல்வெட்டுள்ள கற்கள் முன்பின் தொடர்பில்லாதும் இடமாறுதலாயும் வெற்றுக்கற்களின் இடையிலுமாகப் பலவாறு சின்னபின்னமாகப் பணி செய்திருந்தன. அவர்கள் பணியில் எழுத்து வாசகர்கட்குத் தலைகீழாகத் தெரியும்படி வைக்காதது ஒன்றுதான்குறை! இப்படியுள்ள கல்வெட்டுக்கற்களில் நான்கு வரிகள்தான் செதுக்கப்பட்டிருந்தன. அவைகளில் 'ஆளுடைய நம்பி' என்ற ஒளி வைரப் பதங்கள் கண்டவுடன் என் முயற்சி திருவினையாயிற்று. பின்னர் ஒவ்வொரு கல்லின் எழுத்துக்களையுந் தனித்தனி துண்டுக்கடிதத்தில் எழுதித் தொடர்ச்சியாகக் கோவை செய்தேன். அவைகளில் ஆறு கற்கள் தொடர்ந்து வந்தன. வரியின் கடைப்பாகமுள்ள கல்லும் கிடைத்தது. இதில் சம்பந்தமுள்ள முன் பின் தொடர்பில்லா இரண்டு தொடர்ந்த கற்களும் கிடைத்தன. இக்கல்வெட்டில் சம்பந்தமில்லாத இரண்டு கற்களுமிருக்கின்றன. அவை இரண்டும் தொடர்ந்தவையல்ல. கோத்த கல்வெட்டின் நகலை எனது ஆசிரியர் சிதம்பரம் S. K. கோவிந்தசாமிப் பிள்ளை M. A. அவர்கள் பார்வைக்கு அனுப்பினேன். அவர்கள் 'நின்சிதைந்த கல்வெட்டுத் துண்டுகளைத் திறனுடன் கோவைசெய்து அனுப்பிய மெய்கீர்த்தியைக் கண்ணுற நின் அளப்பரிய ஊக்கத்தை யான் எவ்வாறு புகழாது இருக்கமுடியும்? நின்கோவை அநேகமாகச் சரியே' என்று எழுதி ஊக்கினார்கள். அக்கல்வெட்டுக் கோவை வருமாறு:—

வரி (1) 1ஸ்வஸ்தி ஸ்ரீ பூரு மருவிய திருமாது, 2-ம் புவிமாதுஞ் ஜயமாது காமருவியகலைமா, 3தும் புகழ் மாது நயந்து புலக, 4அருமறை விதிநெறி அனைத்துந் தழைப்பவருமுறை, 5 உரிமையில் மணி முடி சூடித்திங்கள், 6வெண்குடைத்திசை * * * * 7ராஜராஜ தேவர்க்கு (2) 1யாண்டு

ருகர்ளார் வுயனல் ராஜ, 2ராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி மேலூர் நாட்டு, 3த் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வர, 4முடையார் கோயிலில் எழுந் தருளி இருக்கும் ஆளு, 5டைய நம்பிக்குவேண்டும் அர்ச, 6னைகளுக்கும் திருக்கை செ * * * * 7வறு பிறிந்த இ (3) 1வ்வூர்த் தென்பிடாகை குளத்தூர் நீர், 2நிலம் பக்கமடையரு ௩௦ விருப்பதிற்று வேலியும், 3புரிய வில் நத்தத்துக்குக் கிழக்கு வரிக், 4குத் தெற்கு நிலம் ௧௦ வேலி இந்நிலம் பதிற்று வேலியும், 5ஆக நிலம் நாற்பதிற்று வேலி இந், 6நிலம் நாற் பதிற்று வெ * * * * * 7ல்லு ஆயிரத் (4) 1திருநூற்றுக் கலமும் யாண்டு, 2அஞ்சாவது முதல் அறசனல் பொது இறையிலி, 3யும் மடப்புற இறையிலியுமாக4 இட்டமைக்கு புரவரி ஸ்ரீ காண நாயக, 5ம் புல்லாலி உடையான் எழுத், 6து. இம்மெய்க்கீர்த்தி தென்னிந்தியக் கல்வெட்டுகள் (South Indian Inscriptions) தொகுதி ௫ பகுதி கல் 79-ம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளதால் இக்கோர்வை ஒழுங்காக அமைத்தது தெரிகிறேன். இக்கல்வெட்டில் வரும் இராஜ ராஜன் II கீழை சாளுக்கிய வழி வந்த சோழன் இரண்டாம் குலோத்துங்கன் மகன். 1146 முதல் 1178 வரை ஆண்டவன். இவனே உலாப் பெற்றவன். இக்கல்வெட்டில் கண்டதானம் இவனே வைத்தது குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டின் காலம் 1151௵ ஆகிறது. செட்டியார் அவர்கள் அமைத்த பட்டியலில் சுந்தரரைக் குறித்த இவன் கல்வெட்டு இல்லாததால் இது வரை வெளிப்போந்த கல் வெட்டுகளில் இராஜ ராஜனது சுந்தரரைப்பற்றிய கல்வெட்டு இதுவே முதலாவதாகும்.

# திருவகுப்பு

முருகப் பெருமான் திருவருள் கைவரப்பெற்றுப் பதினைந்தாம் நூற்றாண்டில் திகழ்ந்த வரும் சிவாநுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய 'திருவகுப்பு' என்னும் அரிய நூலுக்கு, எனது தமிழ்ப்போதகாசிரியர் ஒருவர் குறித்து வைத்த குறிப்புக்கள் எமக்குக் கிடைத்தன. அவைகளைச் செப்பனிட்டு "சித்தாந்தம்" வாயிலாக வெளியிடத் துணிந்தேன். பின்னர் இது புத்தகரூபமாய் வெளிவரும். இவ்வுரை யில் காணும் குற்றங்களைத் தமிழ்ப் பேரறிஞர் இப்பத்திராசிரியர் அவர்கட்கு எழுத வேண்டுகிறேன்.

[பெயர் விழையான்]

## வேல் வகுப்பு

பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்குநிக ராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவர மாகும்

கல் 1—முன்மண்டபத்தில் மேற்கு நோக்கி யிருக்கிறது; கல் 2—முன் மண்டப வட சுவரி லுள்ளது; கல் 3—கர்பக்கிரக வடசுவரில் கோமுத்தின் மேற்பால் கல்வெட் டின்ன இரண்டு கற்களின் இடையிலிருக்கிறது; கல் 4—கர்பக்கிரகத் தென் சுவரில் கீழ் பால்; கல் 5—கர்பக்கிரகத் தென் சுவரில் மேல் பால்; கல் 6—கர்பக்கிரக வட சுவரில், முன் மண்டப சுவரில் பின் பகுதி மறைந்திருக்கிறது. கல் 7—முன் மண்டபத் தென் சுவர்.



பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு
கவிப்புலவ னிசைக்குருகி வரைக்குகையை
இடித்துவழி காணும்
பசித்தலகை முசித்தழுது முறைப்படுத
லொழித்தவுண ருரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவரு ணேரும்

சார்க்குமுனி வார்க்குமக பதிக்கும்விதி
தனக்குமரி தனக்குமரர் தமக்குமுறு
மிடுக்கண்வினை சாடும்
சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி
யொளிப்பவலை யடக்குதழ லொளிப்பவொளி
ரொளிப்பிரபை வீசும்

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு
மெனக்கோர்துணை யாகும்
சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கியெழு
மறத்தைநிலை காணும்

தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தவிறை
கழற்குநிக ராகும்
தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும்

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும்
சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும்

திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது
குடித்துடைய உடைப்படைய அடைத்துதிர
நிறைத்துவிளை யாடும்
திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை
முளைத்ததென முகட்டினிடை பறக்கவற
விசைத்ததிர வோடும்

சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும்

திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன் மயில்
நடத்துகுகன் வேலே.

பருத்த - பெருத்த, முலை - தனத்தையும், சிறுத்த - சிறுகிய, இடை - இடையினையும், வெளுத்த நகை - வெளுத்த பல்லினையும், கறுத்த குழல் - கறுத்த கூந்தலையும், சிவத்த இதழ் - சிவந்த - உதட்டையுமுடைய, மறச்சிறுமி - வேடப்பெண்ணின், விழிக்கு நிகராகும் - கண்ணுக்கு (வள்ளிநாயகியார்) ஒப்பாகும்.

பனைகை - பனைமரம் போன்ற துதிக்கையினையும், முகபடம் - முகபடாமணிந்த, கடமதம் - கன்னமதத்தையுமுடைய; தவளகசம் - வெள்ளையானைக்கு, கடவுள் - அதிபனுகிய, (இந்திரனது), பதத்து இடும் - காலிவிட்ட, நிகளத்து முளை - சங்கிலியின் முளையானது, தெறிக்க - தெறித்துப் போதற்கு, அரம் ஆகும் - அரமாகும். பழுத்த - முதிர்ந்த, முது - பழைய, தமிழ்ப்பலகை - தமிழ்ச்சங்கப் பலகையில், இருக்கும் - இருக்கிற, ஒரு - ஒப்பற்ற கவிப்புலவன் - நக்கீரனது, இசைக்குருகி - பாடலுக்குத் திருவுள்ளமுருகி, வரைக்குகையை - மலைக்குரிய குகையை, இடித்துவழி காணும் - இடித்து வழியுண்டாகச் செய்யும்; பசித்த அலகை - பசித்த பேய்கள், முசித்து அழுது - புலம்பியழுது, முறைப்படுதல் ஒழித்து - முறையிடுதலை நீக்கி, அவுணர் - அரக்கரது, உரத்து உதிரம் - மார்பின் உதிரத்தையும், நிணத்தசைகள் - நிணத்தோடு கூடிய மாமிசங்களையும், புசிக்க - உண்ண, அருள் நேரும் - அருள் செய்யும். (௫)

சார்க்கும் - தேவர்களுக்கும், முனிவர்க்கும் - முனிசிரேஷ்டர்களுக்கும், மகபதிக்கும் - இந்திரனுக்கும், விதிதனுக்கும் - பிரமனுக்கும், அரிதனுக்கும் - விஷ்ணுவுக்கும், நரர்தமக்கும் - நரருக்கும், உறும் - உண்டாகிற, இடுக்கண் - துன்பங்களையும், வினை - அவற்றிற்குக் காரணமாகிய வினையையும், சாடும் - அழிக்கும், சுடர்ப்பரிதி - ஒளியையுடைய சூரியன், ஒளிப்ப - மறையவும், நிலவொழுக்கும் மதி - நிலா வீசுகிற சந்திரன், ஒளிப்ப - மறையவும், அலை அடக்கு - கடலை (எல்லை கடவா) தடக்குகிற, தழல் - வடவைத்தீ, ஒளிப்ப - மறையவும், ஒளிர் - விளங்குகிற, ஒளிப்பிரபை வீசும் - ஒளிப்பிரபையை வீசும், துதிக்கும் - தோத்திரம் பண்ணுகிற, அடியவர்க்கு - அடியாரை, ஒருவர் கெடுக்க - ஒருவர் கெடுக்கும் பொருட்டு, இடர் நினைக்கின் - துன்பஞ் செய்ய நினைத்தால், அவர் குலத்தை - அவர் வமிசத்தை, முதல் அற - வேர் அற, களையும் - களைந்துவிடும், எனக்கோர் துணையாகு - (ஒன்றுக்கும் பற்றாத) எனக்கொரு சகாயமாகும், சொலற்கு அரிய - சொல்லுதற்கரிதாகிய, திருப்புகழை - தன் திருப்புகழினை; உரைத்தவரை - சொன்னவரை, அடுத்த - கிட்டின; பகை - சத்துருக்களை, அறுத்து எறிய - அறுத்தெறிதற்கு; உறுக்கி எழும் - கோபித்தெழும்; அறத்தை - தருமத்தை, நிலை காணும் - நிலைபெறச் செய்யும். (௬)

தருக்கி - செருக்கி, நமன் - யமனானவன், முருக்கவரின் - கொல்ல வந்தால், எருக்கு மதிதரித்த முடி - எருக்கம் பூவையும் பிறைச் சந்திரனையும் தரித்த திருமுடியையுமுடைய, விறல் படைத்த - வெற்றியைப் படைத்த, இறை படைத்த - தலைமையைப் பெற்ற சிவபெருமானது, கழற்கு - திருவடிக்கு, நிகர் ஆகும் - நிகராயிருக்கும் (திருவடிக்கு நிகராய் யமனைக் கொல்லும் என்றபடி) தலத்திலுள - உலகிலுள்ள, கணத்தொகுதி - பேய்க் கூட்டங்கள், களிப்பின் உண - களிப்போடு உண்ணுதற்கு, அழைப்பது என - அழைத்தல் போல, மலர்க்கமலம் - தாமரை மலர்போலும் கரத்தின்; முனை - கை நுனியை, விதிர்க்க - அசைத்தலும், வளைவு ஆகும் - வளையும், தனித்து - தனிமையாய், வழிநடக்கும் - வழியில் நடக்கிற, எனது இடத்தும் - எனது இடப்பக்கத்தும், ஒருவலத்தும் - ஒப்பற்ற வலப்பக்கத்தும், இருபுறத்தும் - முன்னும் பின்னுமாகிய இரண்டு பக்கத்தும், அருகு அடுத்து - மிகச் சமீபித்து, இரவு பகல் - இரவினும் பகலினும், துணையது ஆகும் - உதவி செய்யும்; சலத்துவரும் - கோபித்து வருகிற, அரக்கர் உடல் கொழுத்து வளர் - அரக்கர் உடம்பில் கொழுத்து வளர்ந்த, பெருத்த குடர் - பெருத்த குடலினை, சிவத்த தொடை என - சிவந்த பூமாலையென; சிகையில் - தனது நுனியில், விருப்பமொடு சூடும் - விரும்பித் தரித்துக் கொள்ளும், (௭)

திரைக்கடலை - அலைகளையுடைய கடலினை, உடைத்து - உடைத்து, நிறை - நிறைந்த, புனல் - நீரை, கடிது குடித்து - விரைவிற் குடித்து, உடையும் - உடைகிற, உடைப்பு அடைய - உடைப்புக்க ளெல்லாவற்றையும், அடைத்து - மூடி, உதிரம் நிறைத்து - உதிரத்தை நிரப்பி, விளையாடும் - விளையாடா நிற்கும், திசைக்கிரியை - எட்டுத் திக்குகளிலுமுள்ள மலைகளை, முதல் - முற்காலத்தில், குலிசன் - இந்திரன், அறுத்த - வெட்டின, சிறகு - சிறகுகள், முளைத்தது என - மீட்டும் முளைத்ததென்று சொல்லும்படி, முகட்டினிடை - அண்ட முகட்டில், பறக்க - பறக்கும்படி செய்து, அறவிசைத்து - மிகு வேகங்கொண்டு, அதிர - எல்லா உலகங்களும் நடுங்கும்படி, ஓடும் - விரைந்தோடும், சினத்து - கோபத்தையுடைய, அவுணர் - அரக்கர், எதிர்த்த - எதிர்த்துப் போர் செய்த, ரணகளத்தில் - போர்க்களத்தில், வெகு - அநேகமான, குறைத்தலைகள் - கபந்தங்கள், சிரித்து - நகைத்து, எயிறு கடித்து - பல்லைக் கடித்து, விழிவிழித்து - கண் விழித்து, அலற - அலறும்படி, மோதும் - அவைகளைச் சென்று தாக்கும், (இவ்வாறெல்லாம் செய்வது யாதெனின்) திருத்தணியில் - திருத்தணிகையில், உதித்தருளும் - காட்சி தந்தருளுகிற, ஒருத்தன் - ஒப்பற்றவனும், மலை விருத்தன் - மலை கிழவனும், எனது உளத்தில் உறை - என் மனத்தில் வாழ்கின்ற, கருத்தன் - கருத்தனும், மயில் நடத்து - மயிலை நடத்துகின்ற, குகன் - குகனும் (ஆகிய) முருகவேளின், வேலே - வேற்படையேயாம். (௮)

குறிப்புக்கள். பருத்த முலை :—1. கல்லாக்கயவர்க்கு அருநூல் கிளமறை - சொல்லினர்தோமெனத் துணைமுலை பெருத்தன (கல்லாடம்-அகவல் 1). 2. உடைத்து மிழ்நறவு உண்டு உறங்கு தார்க்கொன்றையன் - திருவடி புகழுநர் செல்வம் போலும் அண்ணாந்தெடுத்த அணியுறவன முலை - (கல்லாடம் அகவல் 40). 3. நின்றறி கல்வி யொன்றிய மாந்தர் - புனைபெருங்கவியுள் தருபொருளென்ன - ஓங்கிப் புடைபரந்து அமுதம் உள்ளூறிக் - காண்குறி பெருத்துக்கச்சுதகடிந்தே - எழுந்து மணிபொன் பூமலையென யாப்புற்று - அணிபெருமுலை மேல் (கல்லாடம் அகவல் 23). 4. பொருப்பென எழுந்து வல்லின் பொற்பெனத்திரண்டு தென்னக் - தருப்பயில் இளநீரென்னத் தண்ணென அமுதுட்கொண்டு - மருப்பெனக் கூர்த்து மாரன்மகுடத்தில் வனப்புமெய்தி - இருப்பதோர் பொருள் உண்டாமேல் இணைமுலைக்கு உவமையாமே (கந்தபுராணம் - அசுர - மாயைப் படலம் செய். 51.)

சிறுத்த இடை :—1. பல உடம்பு அழிக்கும் பழிநூன் உணர்வினர் - நலமெனத் தேய்ந்தது அடியெனு அசப்பே (கல்லாடம் அகவல் 1). 2. அவன் கழல் சொல்லுநர் அருவினைமாறும் - மலைமுலைப்பகை யடமாழ்குறு நுசுப்பு (கல்லாடம் அகவல் 40). 3. கண்டுழிமாயுமன்றே மின்னெனில் ககனமாகக் - கொண்டிடின் உருவின்றாகும் கொடியெனில் அடியதென்னில் - திண்டிறல் நாகமென்னில் சீர்தன்று அணங்கினுப்பண் - உண்டிலையென்று மானும் உண்மைக்கோர் உவமை யுண்டோ (கந்தபுராணம் - அசுர - மாயைப்படலம் செய். 54.)

வெளுத்த நகை :—1. முருந்து நிரைத்த திருந்து பல் (கல்லாடம் அகவல் 5). 2. வெண்ணகைச் செவ்வாய்க் கருங்குழன் மகளிர் (கல்லாடம் அகல் 31). 3. வெள்ளை நகையார் (திருக்கோவையார் செய். 221). 4. முருந்து இளஞ்சாயற்கு உடைந்த மஞ்ஞையு

தாய் மூளைத்த தன்னுடன் பிரியாமல் - இருக்கு உருக்காட்டாச் செயிராதாய் ஒழியத் தென்னொளி கித்திலம் விலைப்பட்டு - அருந் திறற்காப்புற்று உட்புரை காணுற்று அலைய வென்முல்லை நெக்குடைய - பொருந்துதண் அமிழ்தம் ஊற்றிருக்கு ஒளிகால் பொழி புகின் மணிகை (திருவானைக் காப்புராணம் - அகிலாண்டநாயகி ஆராதனை - 35). 5 முல்லையு முருக்கு முத்து முறுவலென்றுரைத்த போது - சொல்லையு மமிழ்தும் பாலுந் தேனுமென்றுரைக்கத் தோன்றும் - அல்லதொன்றுவதில்லை யமிழ்திற்கு முவமை புண்டோ - வல்லையே லறிந்து கோடி மாறிலாவாறு சான்றோய் (கம்ப - கிஷ்கிந்தா - நாடவிட்ட படலம் 51.)

கறுத்த குழல் :—1. கடவுட் கூரர் உளமெனக் குழலும் கொன்றை புறவகற்றி நின்றனை (கல்லாடம் 1). 2. மணி (நீலமணி) வார் குழல் (திருக்கோவையார் 380). 3. காரினைக் கழித்துக்கட்டிக் கள்ளினோடாவி காட்டிப் - பேரிருட் பிழம்பு தோய்ந்து நெறிவுறீ இப்பிறங்குகற்றைச் - சோர் குழற்றொருதிச் சூழல் சும்மை செய்தனைய தம்மா - னேர்மையைப் பெருமை செய்த நிறைநறுங் கூந்த லீத்தம் (கம்பர் - கிஷ் - நாடவிட்ட 59). 4. இருள் சுடர் எதிராது எழிலியோ ரியல்பினிராது - கருமண வொழுக்கு நீவ வில்லா கதித்தசைவலம் புழுகளையா - உருவளர் கொன்றைகமுகு மெல்லெனு என விவை யொழித்து இயன்மணமே - மருவி மெய்யடியார் மலவிருள் தூக்கும் (திருவானைக் காப்புராணம் - அகிலாண்டேஸ்வரி ஆராதனை செய். 27).

சிவந்த இதழ்:—1. சீர் அரமகளிர் செவ்வாய் காட்டிப், பசந்தாட் சேக்கொளாம் பண் மலராத (கல் - 37). 2. கெண்டையக் தடங்கட்பாவை கேழ்கிளர் இதழ்க்கொப்பு உன்னில் - தொண்டையங் கனியுண்டென்று சொல்வனேல் அதுவுந்துப்பால் - உண்டிமேம் விரும்பினோருக்கு உவப்புருவகிர்த கல்கிக் - கொண்டிருந்திடினே ஒப்பாம் இல்லையேற் கூடாதன்றே (கந்தபுராணம் - அசுர - மாயைப்படலம் - செய். 44).

கறைச்சிறுமி :—1. வேடிச்சி கொங்கை விரும்புங்குமரனை (கந்தரலங்காரம் - செய். 58). 2. கூதாள கிராத குலிக்கிறைவா (கந்தரநுபூதி 88). 3. வனசார்கொடிச்சிதனை யாசிக்கும் யாசகனும் (வேடிச்சிகாவலன் வகுப்பு). 4. குளிர்புன மொய்த்திட்ட சாரலிற் போய்ச் சிறு குறவர்மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரனை முத்துக்குமாரனைப் போற்றுதும் (மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் - காப்பு - 4).

விழிக்கு நிகராகும் :—இதில் வேலை விழிக்கு ஒப்பிட்டிருக்கின்றார். 1. கூர்வேல் விழிமங்கையர் (கந்தரநுபூதி 24). காய்சின வேலன்ன மின்னியல்கண் (திருக்கோவையார் 74).

பனைக்கைமுகபட...கைக்கடவுள் :—1. பனைக்கைமும் மதவேழம் உரித்தவன் (திருநா - தேவா - கோயில்).

பதந்திடு நிகளத்து மூளை :—காலில் பூட்டிய சங்கிலிக்கு (அதனைக் கழலவிடாமல் காக்கும்) மூளை என்று கூறுதலும் ஒன்று.

தெறிக்க அரமாகும் :—அரம் - வாள்முதலிய ஆயுதங்களைக் கூர்மை செய்வதனுக்கு உபயோகமாகும் கருவி. 1. அரம்போலுங் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர் (திருக்குறள் 996). 2. தமிழ்க்குற்றமெல்லாம் அராவுமரமாயிற்றன்றே (கல்பாமா - தனியன்). 3. வாளரம் பொருத வேலும் (கம்பர் - பாலகா - மிதிலைக் காட்சி 14).

பதந்தமுது...கவிப்புலவன் :—கவிப் புலவன் - நக்கீரர், இசை - நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை - இப்பாடலை விருப்புடன் கேட்டனர் முருகப் பெருமான். 1. பொன்னவிர் சுணங்குபூத்த புணர்முலைக் கருங்கண்வள்ளி - கன்னலும் அமுதுந்தேனும்



ஐக்கும் இன்றீஞ்சொல் மாற்றி - தன்னிகர் புலவன் கூறும் தமிழ்ச்செவி சாய்த்துக் கேளா - அந்நிலை மனங்களிப்புற்று அறுமுகம் படைத்த கோமான் 2. தயின்மலி கோலா - அந்நிலை ... திருமால் வீழ்ந்து அணுக்கென எழுந்திறப - வெயின் மணியணை முடக்கு மெய்க்கிமிர்த்து ஒடு ஆடும் - மயின்மிசை அலையிற்றோன்றும் வளரிளம் பருதிப்புத்தேள் - இயன்மலி உருவத் தோன்ற இவர்த்தறுமுகம் இலங்க. 3. பன்னிரு கதிரும் தோன்றும் பன்னிருமலைகள் போலும்,மின்னவிர் குழைகள் தாழ்ந்து விளங்குறுகுவ வுத்திண்டோள் - பொன்னரி மாலைதாழப் பொலன்கழல் புனைந்துவக்தென் - சென்னியின் மலர்த்தகஞ்சத் திகழ்தர வந்து தோன்றி. 4. பூதனாதனுக்கங்காமப் புலவனைப்பூத முண்ணுங் - காதலால் கணுகும்போது ஓர் கதையினால் அலகிலண்டம் மோதினான் எனவே மோதி முடிதகர்த்ததனை வீட்டிமேதையாம் புலவரோடும் விடுத்தனன் முறையுளோரை என்னும் சௌனத்திப் புராணச் செய்யுட்களால் உணர்க. 5. (நக்கீரச் சருக்கம் - 116 - 119) அருவரை திறந்தவன். சங்கராம கற்கிமுகி - அபயமிட அஞ்சலென்று அக்கீரனுக்குதவி அரசறிய வாமன முனிக்கொரு தமிழ்த்ரயமும் அபரிமிதமாக விவரித்த கடவுட் புலவன் (பூதவேதாள வகுப்பு) என்னும் அடிகளும் இங்கே ஆராயத்தக்கன.

புசித்தலகைமுசித்தழுது முறைப்படுதல்...புசிக்க அருள்நேரும்:—1. வேகைக்கு விறளனே மெலியாநின்றேம் - மெலித்த உடல் தடிப்பதற்கு விரகுங்காணேஞ்-சாகைக் கித்தனை யாசைபோதும் பாழில் - சாக்காடும் அரிதாகத்தந்து வைத்தாய். 2. சாவத்தான் பெறுதுமோ சதுமுகன்றான். கீழ் நாங்கண் மேனாட் செய்த - பலைத்தால் எம் வயிற்றில் பசியை வைத்தான் - பசிக்கல்லேம் எங்கட் கல்லேம் - (கலிங்கத்துப்பரணி, பேய்முறைப் பாடு, கண்ணி 4+5) 3. மதிதாக்கு வரவொழிந்து மதகினைத்து சதமகன்-பதிதாக்கு படை பயின்று செறிதவிக்த பசியவே. 4 கருகிறங்கொடு உருவு கொம்பு வெருவும் உம்பர் பரி பிளந்து தசைமிசைந்து சிறதவிக்த கழிவிடும் பசியவே (தக்க யாகப்பரணி - பேய்களைப் பாடியது கண்ணி 12 13) வினைத்தலந்தனில் அலகைகள் குதிகொள விழுக்குடைந்து மெய் உகுதசை கழுகுண விரித்தகுஞ்சிய செனுமவு ணரையமர் புரிவேலா (திருப்புகழ் 5).

சூரர்க்கு முனிவார்க்கு...இடுக்கண்வினை சாடும் :—1. அரியுமயனொடு அபயமெனவே அயிலை அலைமேல் விடுவோனே (திருப்புகழ் 542) 2. அசுரர்கள் குடியே கெட அமரர்கள் பதியே பெற அதிரிடும் வடிவேல் விடும் அதிசூர (திருப்புகழ் 449) 3. வேதலோகர் பொனிலத்தவர் சித்தாரதி - பராசிலமுனிவர்க்க முறையிட்டலற - வேலையேவியவுணக்குல மிறக்க கைகொண்ட சிவ (திருப்புகழ் 964).

சுடர்ப்பரிதி...பிரபை வீசும்:—1. கிரியலை வாரிச் சூரித்தப் - புணரியின் மூழ்கிக் கூளிகளிக்கக் - கிரணவை வேல் புத்தேளிர் பிழைக்கத் தொடு வேலவனே. (திருப்புகழ் 158).

துதிக்கு மடியவர்...துணையாகும்:—1. திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவருவாவே-ருத்தரை மதிப்பதில்லை உன்தனருளாலே. (தனிப்பாடல்).

சொலற்கரி...அறத்தை நிலைகாணும் :—1. ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும் - வானம் அரசான வரம்பெறலாம்-மோனவீடு, ஏறலாம் யானைக்கிளையான் திருப் புகழைக் கூறினர்க்காமே யிக்கூறு (தனிப்பாடல்.).

தருக்கி நமன்...கழந்துநிகராகும்:—1 ஆறுமுகத் தோன்றும் எழில் அழகிய வேல் தோன்றுமவன் - ஏறுமயில் தோன்றும் எழில் தோன்றும்-சிறிவரு - சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப் - பாரில் வழுத்தினோர்பால் (தனிப்பாடல் 1).

தனித்துவழி...துணையதாகும்:—1. ஏலம் வைத்த புயத்தில் அணைத்தருள் - வேலெடுத்த சமர்த்தை உரைப்பவர் எவருக்கு மனத்தில் ... யருள்வோனே

... சென்னை-600 ...
187163.
... 132.5.2

(திருப்புகழ் 499) 2. வேலுமயிலு நினைந்தவர் தந்துயர் தீரவருள் தரு கந்த நிரந்தர - மேலை வயலை யுகந்துள நின்றருள் பெருமானே (திருப்புகழ் 920).

சலத்துவதும்...விருப்பமோடு சூடும்:—1. முதியவுணர் அன்றுபட்ட முதியகுடர் கன்று சுற்று முதுகழுகு பந்தரிட்ட வேலினன் (கடைக்கணியல் வகுப்பு) 2. அடலசுரர் உடல் பிளந்து நிணமதனில் முழுகியண்ட - அமரர் சிறை விடுப்ரசண்ட வடிவேலா (திருப்புகழ் 144).

திரைக்கடலை...விளையாடும்:—1. பரவையாழி நீர்மோத நிருதர் மாளவாளுடு - பதியதாக வேலேவு - மயில்வீரா (திருப்புகழ் 698) 2. கிரியலைவாரிச் சூரர்தத்தப் - புணரியின் மூழ்கிக் கூளி கயக்கக் - கிரணவை வேல் புத்தேளிர் பிழைக்கத் தொடுவோனே (திருப்புகழ் 158) 3. வடகிரி தொளைபட அலைகடல் சுவறிட மற்றுத் திக்கினு மெட்டுத் திக்கினும்-வென்றிவாய - வலியுடன் எதிர்பொரும் அசுரர்கள் பொடிபட மட்டத் திட்டியர் கொங்கைக் குத்தி மலைந்தவேலா (திருப் 1017) 4. சமரமுகவெ லசுரர் தமது - தலைகள் உருள - மிகவேகின் - சலதியலற நெடிய பதலை தகர அயிலை விடுவோனே (திருப்புகழ் 181).

திசைக்கிரியை...முகட்டினிடைபறக்க:—1. சோலை மடல்கொண்டு சக்ரமால் வரை யரிந்த வஜ்ர - பாணியர் தொழுந் திருக்கை வடிவேலா (திருப்புகழ் 216) 2. படர்தரு சிறகர் முன்போற் படைத்த கொல்லென்ன கோக்கி-மிடல்கெழு வயிர வொள்வாள் விண்ணவர்க் கிறைவன் ஏந்தத் - தடவரை பிடுங்கிவானில் தாழிருங் காத்தால் வீசுங் கடவுண் மாகளிற்றின் செய்ய கனைகழல் வழுத்துவாமே (இலிங்க புராணம்).

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் :—திருத்தணிகை மலை முருகப் பெருமாற்கு மிக உகந்தது. 1. விரையிடங் கொளும்போதினுள் மிக்க பங்கயம்போல் - திரையிடங் கொளு நதிகளிற் சிறந்த கங்கையைப்போல் - தரையிடங் கொளும் பதிகளில் காஞ்சியந் தலம்போல் - வரையிடங்களிற் சிறந்ததித் தணிகை மால்வரையே (செய். 218) (மந்தரத்தினு மேருமால்வரை யினுமணி தோய் - கந்தரத்தவன் கயிலையே காதலித்தது போல் - சுந்தரக்கிரி தொல்புவி தனிற்பல வெனினும் - இந்த வெற்பினி லாற்றவும மகிழ்ச்சியுண் டெமக்கே (செய். 220) 3. தேவராயினும் முனிவராயினுஞ் சிறந்தோர் - ஏவராயினும் பிறந்தபின் இவ்வரை தொழாதார் - தாவராதிகள் தம்மினுங் கடையரே தமது - பாவராசிகள் அகலுமோ பார்வலஞ் செயினும் (226) என்னுங் கந்தபுராண வள்ளியம்மைத் திருமணப் படலச் செய்யுட்களால் உணர்க. 4. தினமும் உற்பல மலர் திருத்தணி இறை திருப்புகழ் (ஞானவேழ வகுப்பு) 5. திருத்தணி மலைச்சிறை திருப்புகழ் படிப்பவர் (திருக்கையில் வழக்க வகுப்பு.)

மலைவிருந்தன்:—1. பழமுதிர்சோலை மலை கிழவோனே (திருமுருகாற்றுப்படை வரி 317).

மயில் நடத்து குகன்:—1. விகடமுட னடைபயில் மயில்மிசை வரு (திருப்புகழ் 511) 2. நீலச்சிகண்டியி லேறும் பிரான் (கந்தரலங்காரம் 26) 3. தனி மயிலேறு மிராவுத்தனே (அல 50) 4. விரிக்குங் கலாப மயூரத்தனே (அலங்காரம் 65) கார்மயில் வாகனனே (அலங் 72).

வேல் முருகப்பெருமானுக்கு ஞான சத்தியாய் விளங்குவது. இதனானே முருகக் கடவுட்கு ஞான சத்திதரன் என்னும் பெயருண்டு. 1. இச்சா ஞான கிரியையெனும் இவை மூன்றிலையாய்க் கிளைத் தெழுந்திட்டு - அச்சாணழிய யறச்சுவற்றும் அயில்வே லொருகை வலத்தமைத்து - நச்சாத வரைத்தெறு மொருகை களினங் குறங்கின் அமைத்த இமையோர் - விச்சாதார் சூழ் ஞானசத்தி தரன துருவம் விதிப்போரும் (தணிகைப் புராணம், அகத்திய னருள்பெறு படலம் 94). 2. பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்



புக்குச் சூர்முதல் தடிந்த சுடரிலை நெடு வேல் (திருமுருகாற்றுப்படை வரி 45, 46) 3. குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும் - அன்றங்கமரர் இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக் - கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும் - மெய்விடா வீரன் கை வேல். 4. வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட - தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி - குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந் தொளைத்த வேல் உண்டே துணை. (தனிப்பாக்கள்) 5. ஒகையாற்றிரை முன்னுளில் உழக்குமா வினையும் வாட்டும் - மேக வெவ்வரையினெல்லை இடித்திடும் இமையோர் போற்றத் - தோகைமேல் உலவுங் கந்தன் சுடர்க்கரத்திருக்கும் வெற்றி வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை (செவ்வந்திப் புராணம்). 6. பாலயிலுங் குழவியெனப் பாரிலுதியாமல் பாறையினுங் கடியமனப் பாவையர் மாலுறுமல் - சேலயிலுங் கொக்கென வெந்நீமை புரியாமல், சேனையிலும் யானையிலும் சிந்தனை வையாமல் - சூலையிலு நமன்றூதர் வாதையிலும் படாமல் சூறையிலுங் கொடியமனஞ் சுழன்று திரியாமல் - காலயிலும் பாம்பயிலுங் கார்மயிலை உகைத்தோன் கையயிலை மாலையிலுங் காலையிலும் பணிவாம். (திருத்தணிகைப் புராணச் சுருக்கம்). 7. வேலை நினைந்தாயோ வியன்கிங்கிணி சூழ்ந்த - காலை நினைந்தாயோ-கனபோரூர் - வேலையாச் சூழ்ந்து தொழுதாயோ நீ சூரியா - கார் இருளைப் போழ்ந்திடுவான் ஏதோபுகல். (திருப்போரூர்ச் சந்நிதிமுறை - மாலை 51) 8. ஒளியினும் கதிரவுணர் உடலாற் காலன் - அளியாற் குளிர்மதியேயாகும். எளிதினனி - தூரம்போய் மீளுதலால் சொன்மனமாம் போரூரில்-வீரன் காக்கேந்தும் வேல் 9. வாழியான் தின்னுயுரு வன்மையும் வாமுங் - கேழில் சுற்றமும் படைகளும் வான்றொடக் கிளர்ந்து - பூழியாலுயர் மால்வரைச் சூழலிற் புகுந்த - ஊழிமாருதம் போலடும் எம்பிரானொரு வேல் (கந்த - அசுர - அவைபுகு படலம் 146.) 10. தாரகற் செற்ற தென்றூல் தடவரை பொடித்த தென்றூல் - வார்புனற் கடலுள் உய்த்த வலியரை மீட்ட தென்றூல் - கூருடைத் தனிவேல் போற்றிக் குமான்றூன் பணிவதல்லால் - போரினைப் புரிதும் என்கைப் புலமையோர் கடனதாமோ (கந்த - யுத்த - இரணியன் யுத்த—32).

காழி கண்ணுடைய வள்ளலார் அருளிய

# பஞ்சாக்கரமாலை

## மூலமும்—பழைய உரையும்

### காப்பு

1. வாரம் பரிவுபெற வந்தித்து முப்பொழுதா
ரோம் பணிந்து நினைந்துருகி—யோரம்ப
னைஞ்சுமுகச் சிந்தாணுக் காளானுற் சண்டனமக்
கஞ்சமெழுத் தஞ்சமரணும்.

[இது விநாயகர் துதி]

(இ - ள்.) அன்பினாலும் பத்தியினாலும் தோத்திரஞ்செய்து மூன்று காலமான சந்திகளில் நமக்கரித்து அநுசந்தானம் பண்ணி உள்ள முருகி ஏரம்பக் கணபதி யென்னுந் திருநாமத்தைபுடையவனாய் அஞ்சு முகங்களையுடைய ஞான வானையாகிய விநாயகனுக்கு அடிமையானால், மறலி நம்மைக் கண்டால் அஞ்சுவன். எழுத்தஞ்சாய ஸ்ரீ பஞ்சாக்கரம் நமக்குக் காவலாம்.

[கு - ரை.] வாரம் : அன்பு. பரிவு : பக்தி. மும்பொழுதாம் நேரம் பணிந்து : ஸாயகஸ்ய ஸம்யூர்த்ய ஸேவ்ஹி | செரியாதீபிகை. அனுசந்தானம் : இடைவிடாது தியானிக்கை.

2. கல்லேன் பிறநூல்கள்[1] ; காழியர்கோன் பாடலல்லாற்
சொல்லேன் ; சுராரைத் தொழுகிலேயேன்—நல்லசிறு
செஞ்சதங்கை கொஞ்சுதண்டைச் சிற்றடிக்கன்[2] பாகவெழுத்
தஞ்சுதங்கை யாமலக மாம்.

[குருத்துதி]

(இ - ள்.) பதிவாக்கிய மல்லாத நூல்களை யதிகரியேன்; காழிக் கவுணியன் பாடலாகிய திருப்பதிகங்களே யன்றி மந்திரங்களே யாயினுஞ் சொல்லேன்; அவன் சிற்றடி யன்றி மந்திர ரூபிகளையும் பணிதற்கு நினைவதுஞ் செய்யேன். நல்லதாய்ச் சிறியதாய்ச் செம்பொன்னாற் செய்த சதங்கையுடன் தண்டை பொருந்திய அந்தத் திருவடிக்கு அன்புண்டானாற் பஞ்சாக்கரமானது என்னுடைய அழகிய கையில் நெல்லிக்கனி போலப் பலிக்கும். உ

[கு - ரை.] பதிவாக்கியம்: சிவபெருமானே கடவுள் என்பது; 'கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்' என்றார் நாவுக்கரையரும். காழிக்கவுணியன்: ஞானசம்பந்தர்; காழியர் கோன் கழல் போற்றி. மந்திரேசரர்: அஷ்டவித்தியேசரர் முதலியோர்; அவராவர் சுத்தவித்தியா தத்துவத்திலுள்ள சப்தகோடி மகாமந்திர ராதியர். அஷ்டவித்தியேசுராவார் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், மூர்த்தி, சிகண்டர், சீகண்டி.

(பி - ம்.) 1 பிறர் நூல்கள். 2 சீறடி.

நூல்

3. அஞ்செழுத்து மைம்பத்தொன் றாமெழுத்துப் போலன்றி
நெஞ்சழுத்து முட்பொருளை நீநினைந்து—தஞ்சமென
வெங்குநிறை வானமையு மிவ்வெழுத்தா மவ்வடிவிற்
றங்குபொரு ளானமையுஞ் சாற்று.

[இது நிட்கள வெழுத்து அங்கம் சகளவெழுத்தில் நிற்கும் நிலை சொன்னது]

(இ - ள்.) பஞ்சாக்கரங்களை ஐம்பத்தோரக்கரங்களைப் போல எழுத்தென்று நினையாமல் அறிவிலே வடிவற நின்றழுந்தும் எழுத்துக்களென்று உட்பொருளை நினைந்து அந்த அஞ்செழுத்தே யாவர்க்கும் தஞ்சமாக, எங்கும் பூரணமாய் நிற்கும் நிலையுந் தரிசித்து, அந்தப் பொருளஞ்சும் இந்த எழுத்தாணவி நிற்கும் நிலையும் அறிவாய். ங

[கு - ரை.] அறிவிலே வடிவறநின்று அழுந்தும் எழுத்துக்கள் என்றது. அகார வுகார மகரங்காரம் புத்தி மகாரம் மனம் (சி. போ. iv. வெ 4) என்றதனை நோக்கி.

மன்னு மகாரம் மனஞ்செலுத்தும் புத்தியினை
உன்னு முகார முபகரிக்கும்—முன்னரும்
ஆங்கார நன்னை யகாரஞ் செலுத்தியிடும். துகளறுபோதம், 14.
அவ்வுடனுவ்வுமவ்வுமனம்புத்தியகங்காரங்கள்
செவ்வியவிந்துநாதஞ்சித்தமோடுள்ளமாகும். சிவ - சித்தி, 193,



அஞ்செழுத்தே எங்கும் பூரணமாய் நிற்கும் நிலை : அயன், அரி, அரன், ஈசன், சதாசிவன் முறையே அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் இவைகளை நடத்தி வியாபிக்கும். சிவ - சித்தி 193, 194.

4. தாபரமாம் லிங்கத்திற் சங்கமத்திற் றண்டிலத்திற்[1]
றீபரவு குண்டத்திற் சிந்திக்க—மாபரனு
ரங்கங்குத் தோற்றுதல்போ லஞ்செழுத்தா மப்பொருளும்
கங்கங்க ளாமெழுத்தஞ்[2] சும்.

[இது சிவபெருமான் சிவலிங்கத்தினிடத்திற் பிரசன்னம்போல பஞ்சாக்கரத்திலும் பிரசன்னமாம் என்பது]

(இ - ள்.) தாபரமாகிய சிவலிங்கப் பெருமானிடத்திலும், உற்சவ பேதங்களிடத்திலும், வேதிகையிடத்திலும், அக்கினி குண்டத்திலும் ஆவாகித்துத் தியானிக்க, நிட்களமாகிய சிவன் அந்தந்த இடங்களிலே பிரசன்னமானாற்போல, பஞ்சாக்கரமாகிய நிட்களப் பொருள்களும் இந்த வடிவாகிய பஞ்சாக்கரங்களிலே தரிசனப்பட்டவர்களுக்குத் தோன்றும். ச

[கு - ரை.] தாபரமாகிய சிவலிங்கப்பெருமானாவது திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் மூலத்தானங்கள். தண்டிலம், தண்டலம் ஒரு பொருளன. 'தருமணன் மணிமுத்தாகத் தண்டலமியற்றி' என்பது சூளாமணி; 'தண்டிலந்தனினும் பன்தரு மிலிங்கமூர்த்தியினும்' என்பது காஞ்சிப்புராணம்.

(பி - ம்.) 1 தண்டிலத்தில். 2 எழுத்தீதஞ்சு.

5. அகராதி யீரெட்டா மச்சொழித்தை யைந்தா
முகராதி யைநான்கொன் றொன்று—நகராதி
யன்மூன்று நீக்கிநமச் சொல்லிமக ராதிபத்தி
னன்மூன்று லஞ்செழுத்தா நன்கு.

[இது பஞ்சாக்கரத்துக்கு அக்கரச்சேர்வைவிதி சொன்னது ; சிவலிங்கத்துக்குப் பாடாணசுத்தி சொன்னதுமாம்.]

(இ-ள்.) அகார உகார மகாரங்களிடத்திற் றோற்றப்பட்ட ஐம்பத்தோரட்சரத்திலும் பிரமாவினுடைய வங்கிசமாகிய அகாரத்திற் றோன்றிய அச்சாகிய பதினாறு எழுத்தையும் நீழாகக் கழித்து, உகாரத்திற் றோன்றிய இருபத்தஞ்சு எழுத்தாகிய கவர்க்கம் நான்கும், சவர்க்கம் நான்கும், தவர்க்கம் நான்கும், பவர்க்கம் நான்கும் ஆக இருபதெழுத்தும் ங, ஞ, ண, ந, ம வாகிய சுன்னெழுத்து ஐந்தும் ஆக இவ் இருபத்தைந்தெழுத்தும் விட்டுணு வங்கிசமாகிய உகாரத்திற் றோன்றினமையால் இதுவுங் கீழாகத் தள்ளிச் சிவனை நமக்காரம் பண்ணுதல் விட்டுணுவுக்குள்ள தொழிலாகையால், சுன்னாகிய எழுத்தஞ்சில் ஙகார ஞகார ணகாரமாகிய மூன்றெழுத்தையும் நீக்கி நகார மகாரமாகிய இரண்டெழுத்தையுங் கூட்டி நமவாக்கி, அப்பால் உருத்திராங்கிசமும் மகேச்சுராங்கிசமும் சதாசிவாங்கிசமும் விந்து நாதமுமாகிய மகாரத்திற் றோன்றிய எழுத்து பத்தினுட் சிகார வகார யகாரங்களாகிய அக்கரங்களைக் கூட்டிச் சிவாய என வைத்து நமசிவாய எனச் சிவனையும் சிவனை நமக்காரஞ் செய்வாரையுங் காட்டியது. ரு

6. தொழுதிடுதல் சுத்தனெனுஞ் சூபோன் பொருட்டென்
றெழுமொழியாய் நிற்கு மியல்பாய்—வழுவறவே

நூலமு வைந்தாகிச் சூக்குமமு வைந்தாகு
மேலுரைக்கிற் றன்பெருகு மிக்கு.

(இ - ள்.) சுருதி மிருதி பிரம விட்டுணுக்கள் முதலாயுள்ளார் நமக்கரிக்கைக்குத் தேவனாயுள்ளவன் நின்மலனாகிய சிவன்; அவன் பொருட்டு நமக்காரமென்ற சத்தத்துக்கு அர்த்தமாய் வெளிப்பொருளாய் யாவர்க்குந் தெரியாத பொருளாகிய நூல பஞ்சாக்கரம் பதினைந்துஞ் சூக்கும பஞ்சாக்கரம் பதினைந்துமாக திவ்வியாகமங்களில் அருளிச் செய்தவாறு இந்நூலிற் சொல்லப்பட்டது. அனைத்தும் விரிக்கிற் பெருகும். ௬

## நூல பஞ்சாக்கரம்

7. ஓங்கு மகார வுகார மகாரமதன்
பாங்கணையும் விந்துப் பரநாதம்—ஆங்குப்
பிரணவமாய்ப் பீடங்க ளாய்ப்பிரம ரேகை
மருவுநக ராதியுடன்[1] வந்து.

[இது நகராதியாக நகரங் கீழ்ப்பீடமும், மகரம் நடுக்கண்டமும், சிகரம் மேற்பீடமும், வகரம் கலவபத்திரமும், யகரம் மேற்பூசாங்கிசமுமான சிவலிங்கமும் நூலபஞ்சாக்கர மென்றது.]

(இ - ள்.) அகார வுகார மகாரங்கள் மூன்றுந் தம்மிற்கூடிப் பிரணவமாம். அவை சிவலிங்கத்துக்கு அகாரங் கீழ்ப்பீடமும் உகாரம் நடுக்கண்டமும் மகாரம் மேற்பீடமுமாம். மகாரத்தில் உரைப்பு கலவபத்திரத்துடன் அட்டபெந்தனத் தானமும் பிரம ரேகையாகத் திருமேனியைச் சுற்றின ரேகைக்குக்கீழ் சதாசிவத்தானமுமாம். சுற்றின ரேகை விந்துத்தானமும் மேல் முகுளிதமாக எழுந்திருந்தது நாதமும், அப்பாலுள்ள திருமேனி பராவிந்துவும் பரநாதமுமாக, சிவலிங்கப் பெருமானுக்குக் கீழ்ப்பீடமும் திருமேனியானது. ௭

[கு - ரை.] அகார வுகார மகரங்கள் புந்தி.........நாத முனைவடிவா நாடிற் பிரணவமாம். (சி. போ.)

(பி - ம்.) 1 நகாரியுமன் வந்து.

8. பிரமன்கீழ் மாயனடுப் பின்னுகன்மே லீசன்
பரமுள்ள லிங்கத்தின் பாங்காம்—தெரிவுறுமப்
பூசாங்கம் விந்துவுட னாதம் புணர்ந்தநிலை
பேசாய் நகராதி பெற்று.

(இ - ள்.) முன் சொன்ன கீழ்ப்பீடம் பிரமாவைச் சேட்டிக்கும் பிரமசத்திக்கு அதிட்டானமாக விருக்கும். நடுவிற் கண்டம் விட்டுணுவைச் சேட்டிக்கும் விட்டுணு சத்திக்கு அதிட்டானமாகவிருக்கும். மேற்பீடம் உருத்திரனைச் சேட்டிக்கும் உருத்திர சத்திக்கு அதிட்டானமாக விருக்கும். கலவபத்திரம் மகேசுரனைச் சேட்டிக்கும் மகேசுர சத்திக் கதிட்டானமாயிருக்கும். இந்த நாலு காரணேசுரருக்கும் இடம் ஏதென்னில் நாற்கோணமாயும், சதுரமாயும், வட்டங்களாயும், திரிகோணங்கள்பெற்று வரையுடைத்தாயும், பீடம் மூன்றினுக்குள்ளிலும் அடங்கின இலிங்கத்தினுடைய அதோபாகமாய்த் தன்னுடைய சத்திகளாகிய பீடங்கள் மட்டிலே அந்த நாலுகாரணேசுரருக்கும் இடமாயிருக்கும். இவை பீடங்களான் மறைந்து தெரியாத இலிங்கம். இனி, பீடத்திற்கு மேற் பூசாங்கிசமான சிவலிங்கமாய், மேல் விந்து நாதமாய் விந்து நாதத்தின் கூட்டுறவாகிய பீடத்துக்கு மேற்பட்ட இடத்தில் சதாசிவம் நிலைபெற்றிருக்கும். இவைகள் அஞ்சையும் நகராதியாகிய நூல பஞ்சாக்கரமாகக் காணப்படும். ௮



9. மண்ணீ ரனனிலம் வான்கந்த மாதிகுண
மெண்ணீரைந் தா[1] மிந்தி யங்கடின—முண்ணெகிழ்ச்சி
வெம்மை சலிப்பு[2] வெளிகுணியே தானாக
நம்முதலாய் நிற்கு நயந்து.

(இ-ள்.) பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஐந்திலும் இவைகளுக்குக் குணமாகிய கந்தம் இரதம் ரூபம் பரிசம் சத்தம் ஐந்தும், ஆக்கிராணம் சிங்குவை சட்சு தொக்கு சோத்திரமாகிய ஞானேந்திரியம் ஐந்தும், உபத்தம் பாயுரு பாணி பாதம் வாக்காகிய கன்மேந்திரியம் ஐந்தும், கடினம் நெகிழ்ச்சி வெம்மை சலிப்பு வெளியாகிய பூதகுணி ஐந்துமாகிய இவைகளைக் கூட்டிச் சேட்டிப்பன் நகர முதலாகிய நூல பஞ்சாக்கரத்தினால். ௯

(பி - ம்.) 1 ஐஞ்சாம். 2 நலிப்பு.

10. சேர்ந்த நிவர்த்திபிர திட்டை திகழ்வித்தை
சாந்தியுடன் சாந்தியா தீதகலை—சேர்ந்த
கருமந் துலைபொப்புக் காணு மளவுந்
தருமநக ராதிமுதற் றான்[1].

(இ - ள்.) பிருதிவி தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் நிவர்த்தி கலையும், அப்பு தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் பிரதிட்டாகலையும், தேயு தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் வித்தியாகலையும், வாயு தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் சாந்திகலையும் ஆகாச தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் சாந்தியதீதகலையும் ஆகிய பஞ்சகலைகளினும் சர்வான்மாக்களுக்கும் செய்த கன்மங்களைச் சேர்த்துக் கன்மந் துலையொக்குமளவும் இவைகளை நிவர்த்தியாதிகலை முதலாக நகாரதியான நூலபஞ்சாக்கரம் அஞ்சும் நின்று நடத்தும். ௰

(பி - ம்.) 1 தருமன் னகாரமுதற் றான். (அச்சுப் பிரதி)

11. சாக்கிரமே யாதி தருமவத்தை யைந்தினையு
நீக்கவருஞ் சுத்த நிகழ்கருவி—யாக்கியிடு
மேலா லவத்தைவர மேவியுணர் விக்குமதன்
பாலா நகராதி பண்பு.

(இ - ள்.) கீழாலவத்தையும் மத்தியாலவத்தையும் தரிசிக்கும்போது, சுத்தவித்தையைக்கொண்டு சாக்கிராவவத்தையையும், மயேச்சுரத்தைக்கொண்டு சொப்பனவவத்தையையும், சதாசிவத்தைக் கொண்டு சுழுத்தியவத்தையையும், சத்திதத்துவத்தைக் கொண்டு துரியாவவத்தையையும், நாததத்துவத்தைக் கொண்டு அதீதவவத்தையையும் இப்படிப் பஞ்ச தத்துவங்களைக் கொண்டு அவத்தைகளைத் தரிசித்து அவ்வளவிலே நின்றால் சுத்தவித்தை முதலான ஐந்து தத்துவங்களினிடமாக நின்று நகாரதியான அஞ்செழுத்தென்னும் நூலபஞ்சாக்கரம் பதமுத்திகளைக் கொடுக்கும். ௧௧

12. வருஞ்சத்தி யோசாதம் வாமமகோ ரந்தற்
புருடத்தோ டீசானம் போற்றக்—கருமப்[1]
பரிபாக நோக்கிப் படைப்பாதி சத்தி
தெரிவா நகராதி சேர்ந்து.

(இ - ள்.) சத்தியோசாதம் வாமம் அகோரம் தற்புருடம் ஈசானமாகிய ஐந்து திருமுகங்களிலும் ஆன்மாக்களுக்குக் கன்மசாமீபம் பிறக்குமளவும் சிருட்டி திதி சங்காரம்

திரோபவம் அநுக்கிரகமாகிய பஞ்ச கிருத்தியங்களைச் செய்விக்கும் பஞ்ச சத்திகளை யதிட்டித்துக்கொண்டிருப்பன நகராதியான தூலபஞ்சாக்கரம். ௬

(பி - ம்.) 1 கன்ம பரிபாகம்.

13. கன்மசா தாக்கியத்திற் கர்த்திருசா தாக்கியத்தின்
றன்மைதரு மூர்த்தியமூர்த் தங்களிலென — நன்மையுறச்
செய்தசா தாக்கியத்திற் சேர்சிவசா தாக்கியத்தி
லெய்துநக ராதிகடா மென்.1

(இ - ள்.) பீடலிங்கமாய் அஞ்சுமுகமான கன்மசாதாக்கியத்திலும், நாலுமுகமாகிய பீடமில்லாத இலிங்க சொரூபமான கர்த்திரு சாதாக்கியத்திலும், ஏகமுகமான மூர்த்தி சாதாக்கியத்திலும், சோதிலிங்கமான அமூர்த்திசாதாக்கியத்திலும், ஞானமயமான சிவ சாதாக்கியத்திலும், நிற்பன நகராதியான ஐந்து தூல பஞ்சாக்கரம். ௭

[கு - ரை.] கன்ம சாதாக்கிய மென்பது சிவசத்தியான கிரியையிலே தோன்றி நாத மயமான லிங்கத்தையும், பிந்து மயமாகிய பீடத்தையும் பொருந்தித் தொழிற்பட்டிருக்கும்; கர்த்திரு சாதாக்கியம் பிரதிஷ்டையான ஞானத்திற் றோன்றி பளிங்கொளியாய் திவ்ய லிங்கமுமாய் அதில் நான்கு முகங்களும் எட்டுக் கைகளுமுடையதாயிருக்கும். மூர்த்தி சாதாக்கியம் இச்சாசத்தியினின்று மின்னொளியை யொத்த பிரகாசத்தை யுடையதாய் இலிங்கவடிவாகி அதன் மத்தியபாகத்தில் ஒரு திருமுகமுடையதாயிருக்கும்; அமூர்த்திசாதாக்கியம் சாந்தியான ஆதிசத்தியிற் றோன்றி ஸ்தம்பாகிருதியாய் கோடி சூரியப்பிரகாச முடையதாயிருக்கும்; சிவசாதாக்கியம் சாந்தியதீதையான பராசத்தியிற் றோன்றி அதிசூக்குமமாய் அளவிலாச் சோதிமயமாயிருக்கும். பொது வாகக் கூறப்பட்டதைப் பாசம் பரை, ஆதிபரை, இச்சா, ஞான, கிரியாசத்திகளோடு கூடிய ஈசான முதலான மூர்த்த பேதங்களாகும். இதன் விரிவைச் சதாசிவ ரூபத்திற் காண்க.

(பி - ம்.) 1 என்.

14. பன்னுவியோ மாத்திரமும் பாசுப தாத்திரமு
முன்னுமகோ ராத்திரமு மொண்சரிகை — யென்னவரு
மத்திரமு மன்னுசிவ வத்திரமு மம்முதலாய்ச்
சத்தியுடா நிற்குள்ளார் தான்.

(இ - ள்.) சத்தியோசாதத் திருமுகத் தகாரத்தினின்ற வியோமாத்திரமும் வாமதேவத் திருமுகத் தகாரத்தினின்ற பாசுபதாத்திரமும் அகோரமுகத் தகாரத்தினின்ற அகோராத்திரமும் தற்புருடமுகத் தகாரத்தினின்ற சரிகாத்திரமும் ஈசான முகத்தகாரத்தினின்ற சிவாத்திரமுமாகிய பஞ்சவத்திரமும் பாசச்சேதம் பண்ணுவதாய் நின்ற சாந்திக்கும் சிவாத்திரமாகவும் ஆக வியோமாத்திர முதலான அஞ்சத்திரத்திலும் நகராதியான தூல பஞ்சாக்கரம் நிற்கும். இவற்றில், நித்திய நைமித்திய தீக்கை பிரதிட்டை மகோற்சவ முதலான வினைகளுக்குப் பாசுபதாத்திரமாகவும், அனுக்கிரக கிரியைகள் பண்ணுவது மூர்த்திகொண்ட அகோராத்திரமாகவும், இட்டகாமியங்களைக் கொடுப்பது சரிகாத்திரமாகவும், நித்தியபூசைக்கு அத்திரத் தகாரமாகிய வியோமாத்திரமாகவும் கொள்க. இவைகளில் வடிவுறுதியான சிவாத்திர மொழிய நின்ற அஸ்திரமும் பூசையிலே போகாங்கத்திற் காணப்படும். ௮

15. சேர்ந்த விதயஞ் சிரசு சிகைகவச
நேத்திரமென் றைந்தாகி நின்மலமே — யார்ந்துறைநாம்



அங்கங்க ளைந்தா யணுவாகிப் போகமவை
தங்குநக ராதிகளாற் றான்.

(இ - ள்.) இருதயஞ், சிரசு, சிகை, கவசம் நேத்திர மென்னும் ஐந்தும் திருமேனியாக நின்ற அங்கங்களைத் தியானஞ் செய்து, அந்த நிலைகளைப் பெற்ற அநுசதா சிவரானவர் இருதயத்திற்கு அக்கினி நிலையும், சிரசிற்கு ஈசான நிலையும், சிகைக்கு ருத்திரநிலையும், கவசத்திற்கு வாயுநிலையும், நேத்திரத்திற்கு ஈசானத்திலும் மேற்கிலுமாகச் சதாசிவ மூர்த்தியைப் போகாங்கமாகச் செய்திருப்பார்களாகையால், அந்த இருதயாதி ஐந்திடத்திலும் நகராதியான தூலபஞ்சாக்கரம் அஞ்சும் பஞ்சாநுக்கிரகத்தைப் பண்ணிநிற்கும். ௯

16. வாக்கவையாம் வைகரிமுன் மத்திமை பைசந்தி
சூக்குமையா மாயையினைத் தோன்றியே — பாக்கமுட
னித்தமாம்1 வாக்கைச்சு நிற்கநக ராதிகடாம்
வைத்ததா மென்றுணர்வாய்2 மற்று.

(இ - ள்.) வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை, சுத்தமாயை யாகிய ஐந்து வாக்கிலும் நகராதியாகிய தூலபஞ்சாக்கரமைந்தும் நின்று அந்த வாக்குகளினால் ஐம்பத்தோ ரக்கரங்களைப் பிறப்பித்தும், அவைகளால் எண்பத்தொரு பதங்களும் சப்தகோடி மகாமந்திரங்களையும் சதுர்வேதங்கள் முதலான பிறவற்றையும் உண்டாக்கி வைகரி வியவகரிக்கும். ௧௦

(பி - ம்.) 1 நித்தமாய். 2 றருள்வா.

17. சத்திகடான் சத்திபத்தி லெட்டுத் தசமூன்று
மத்தகைவா மத்திலகோ ரத்திருநான் — கொத்தநாள்
தற்புருடத் தைந்தீசத் தாமுப்பத் தெண்கலையி
னொப்பினை ராதியுறும்.

(இ - ள்.) சத்தியோசாதத்தில் எட்டுச் சத்தியும், வாமதேவத்தில் பதின்மூன்று சத்தியும், அகோரத்தில் எட்டுச் சத்தியும், தற்புருடத்தில் நாலு சத்தியும், ஈசானத்தில் ஐந்து சத்தியும் நிலை பெற்றிருக்கும். சத்தியோசாதம் உபத்தத்திலும், வாமதேவம் குய்யத்திலும், அகோரம் இருதயத்திலும், தற்புருடம் வக்த்ரத்திலும், ஈசானம் மூர்த்தாவிலும் இப்படி அட்டத்திரிம்சா கலைகளும் நிற்கும். இவைகளைச் சத்தியோசாத மாதியாக நகராதி ஐந்துமான தூலபஞ்சாக்கரம் அதிட்டித்து நிற்கும். மகேசாதியான சத்தி முப்பத்தெட்டையும் ஈசான சாவென்னும் பதங்கள் முதலான முப்பத்தெட்டுப் பதங்களையும் கோசங்களிற் கண்டு கொள்க. ௧௧

18. படைத்து மவையளித்தும் பண்ணியவை யெல்லாந்
துடைத்து மறைத்துத் துயரின் — றெறிந்து
மொழியாத மைக்கொழிய முய்த்திடுவ1 லாதி
மொழியான வஞ்செழுத்து முன்.

(இ - ள்.) சிருட்டித்தும், திதித்தும், சங்கரித்தும், திரோபவித்தும், அனுக்கிரகித்தும் நிற்கும் பஞ்சகிருத்தியத்தை நகராதியான தூலபஞ்சாக்கரம் ஐந்தும் நடத்தும். ௧௨

(பி - ம்.) 1 உய்த்திடும்.

19. பிராணாதி காலைந்தும் பேதித்து நிற்கக்
கிராணாதி யைந்திணையுங் கிட்டித்—திராணமெனும்
கந்தாதி யைந்திணையு நாகாதி கால்கொள்ளு
முய்ந்தே நகராதி யுற்று.

(இ-ள்.) பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் என்னும் இவை யைந்தும் தேகத்திலே ஒவ்வோர் இடங்களைப்பற்றிநிற்க, நாகன், கிருகரன், கூர்மன், தேவதத்தன், தனஞ்செயன் என்னு மிவை யைந்தும் ஆக்கிராணம், சிவ்வை, சட்சு, தொக்கு, சோத்திரம் இவைகளிலே நின்று கந்தம் ரசம் ரூபம் பரிசம் சத்த மிவைகளைக் கிரகிக்கத்தக்கதாக நகராதியான தூலபஞ்சாக்கரம் ஐந்தும் நிற்கும். ௧௯

20. வித்தை கலைபோ டராக மிருசுத்த
வித்தைமுதன் மூன்றிபற்ற விந்துமுதல்—உய்த்திடும்போய்
மாயை நியதிபைப்பின் மன்னுதடி மாலையிவற்
றேயுநக ராதிகடா/னிங்கு.

(இ-ள்.) வித்தியா தத்துவத்தையும் கலாதத்துவத்தையும் அராக தத்துவத்தையும், அடைவே சுத்தவித்தையும் மயேசுரமும் சாதாக்கியமும் சேட்டித்து ஆன்மாவினிடத்தே ஞானத்தையும் இச்சையையும் கிரியையும் எழுப்பண்ணி, விந்துவான அசுத்தமாயை யையும், நாதம் நியதியையும் காலத்தையும் புமானாகிய புருடனையும் சேட்டிக்க நகராதி யான தூலபஞ்சாக்கரம் ஐந்தும் சுத்தவித்தையாதியான சிவதத்துவ மைந்தினும் நிற்கும். ௨௰

21. தானில்லை முன்னைத் தமமில்லை மன்னுமிறை
போனில்லை சத்திபெனு மொன்றில்லை—மானில்லை
பென்றமுத லைந்தி னிழப்பதுவே பெத்தமென
நின்றநக ராதிகடா னேர்ந்து.

(இ-ள்.) பெத்த பஞ்சாக்கரத்தை புச்சரித்து நின்றதனுல் நவ்வென்னுமெழுத் தில்லையென்னும் பொருளைச் செய்வதாகக்கண்டு தானும் தான்சேட்டிக்கின்ற ஆணவ மும் அந்த ஆணவ மிழப்பித்த சிவமும் அருளும் இந்த வேறுபாடெல்லாம் அறமயக் கின ஆன்மாவும் அறச் சர்வசூனியம் பண்ணுதலால் நவ்வாகிய தானில்லை; மவ்வாகிய மலமில்லை; சிவ்வாகிய சிவமில்லை; வவ்வாகிய அருளில்லை; யவ்வாகிய ஆன்மாவில்லை யெனவாக்கின. நகராதியாகிய தூலபஞ்சாக்கரம் நின்ற முறைமையும் இவ்வாறும். ௨௧

தூல பஞ்சாக்கர முற்றும்.

---

## சூக்கும பஞ்சாக்கரம்

22. தூலமிது சூக்குமங்கேள் தூலம் பதினைந்தின்
பாலுளவாய் நின்று பயனறிந்து—மேலுணர்வில்
நின்றசிவ முன்னாக்க[1] நீடுவாய் நின்றநம
வென்றவைநீ யிட்டே யிரு.

[இது சூக்கும பஞ்சாக்கரம் மாறிநின்ற நிலை சொன்னது]

(இ-ள்.) தூல பஞ்சாக்கரம் இவ்வாறு தரிசித்து இதில் ஆன்மவுபாதி, சிவவுபாதி யிரண்டு நீக்கி, மேலாகிய ஞானவழியினாலே முன்மேற்பட்ட சிவத்தையும் அருளையும்



மேற்படுத்தி திரோபவத்தையும் ஆணவத்தையும் கீழ்ப்படுத்தி, தான் அருவிடமாக நடுவே நிற்பது சுத்தபஞ்சாக்கரமாகிய சூக்கும பஞ்சாக்கரம். ௨௨

(பி-ம்.) 1 முன்னாக.

23. ஆனந்த மாடவெளி யம்பலத்தி லானந்தத்
தானந்த மாமறைப்பின் றன்முதல்கெட்—டானந்த
மாறாத மேலீ டனவரதத் தாண்டவமாய்க்
கூறாத வஞ்செழுத்துங்[1] கூறு.[2]

(இ-ள்.) சிவானந்தத்தின் மேலீடாகிய திருக்கூத்து சிகாரமாக, இந்த ஆனந் தத்தை இவனுக்குத் தோற்றுவாக்கி இவனுக்குப் பாவாபாவ மிரண்டுமற, பரையாகிய சிதம்பரம் வகாரம்; இதில் ஆனந்தமாகிய சுகமெல்லாம் தானறநின்று அனுபவிப்பது யகாரம்; கீழ்ப்பட்ட ஆணவத்தையும் மேற்பட்ட சிவத்தையும் அறிவிப்பானான ஆன் மாவையும் இவைகள் அனைத்தினையும் தெரியாமல் மறைத்து நிற்பது நகாரம்; ஒரு காலும் ஒழியாத ஆனந்தம் வளர்க்கைக்குத் தான்கெட்டுச் செல்லுமது மகாரம்; இப்படி யானந்தத் தாண்டவமாய் நிற்பது சுத்த பஞ்சாக்கரம். ௨௩

1 அஞ்செழுத்தின். 2 கூத்து.

24. பரைதுடிவா ழிச்சை[1] பரிந்தளித்து வீசும்
வரதஞா னம்மபயம்[2] வன்னி—கிரியை
மலமழித்து நல்கும் மலரடிக ளிவ்வைந்[3]
தலைவி லுபாங்கமென வோது.

[நான்கு திருவடிகளும் பாசச்சேதம் பண்ணும் என்றது.]

(இ-ள்.) தமருகம் பராசத்தியாகவும், வரதமாக வீசியகை இச்சாசத்தியாகவும், அபயமாக வமைத்த கை ஞானசத்தியாகவும், அக்கினி கிரியாசத்தியாகவும் அபசார மர்த்தனம்[4] பண்ணின திருவடித் தொழில் ஆதிசத்தியாகவும் உபாங்கங்களில் இவ்வகைத் திருக்கூத்து நிற்கையால், சிகாரம் பரையாகவும், வகாரம் இச்சையாகவும், யகாரம் ஞான மாகவும், நகாரம் அக்கினியாகவும்[5] மகாரம் மலமாகவும் சூக்கும பஞ்சாக்கரம் நிற்கும். ௨௪

(பி-ம்.) 1 வாழிச்சை. 2 வரதஞா னந்தபயம், வரதஞா னானந்தபயம். 3 மலரடி யிவ்வைந்தும். 4 அபத்தனம். 5 வன்னியாகவும்.

25. தற்பதத்திற் சிபொடுவாத் தாமிரண்டு நீயென்னுஞ்
சொற்பதத்தில் பவ்வுந் துரிசற்று—முற்பதநீ
யாமென்று மென்றபதத்[1] தற்றமை வும்பெற்றே[2]
பேயுந்தான் சத்திமூன் றென்.

(இ-ள்.) வேதாந்த மகாவாக்கியமாகிய தற்பதத்திற் சிவமும் அருளுமான சிகாரமும் வகாரமும், தொம்பதத்தில் ஆன்மாவாகிய யவ்வும், உபாதிகழன்ற அந்தப் பொருள் நீயா மென்று மென்ற அசிபதத்தில் ஆணவக்கேடும் விசுவமறைப்பும் பெறுதலால் திரோதாயி யும் ஆணவமுமான அழிவே சித்தமாகப் பெற்று அத்தானந்தியமான வட்டத்தில் தத்துவமசி யென்னும் மூன்று பதமும் தத்தத்தோம், நீ யசியானும் என்னும் தான வட்டத்திற் றிருக்கூத்துச் செய்தலால், இதிற் சிக்ரமாதியான சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு உணர்க. ௨௫

(பி-ம்.) 1 என்றபதத். 2 வும்பெற் றேயுந்.

26. ஒத்த துடியிலுப தேசமியோ கம்வர் தம்[1]
வைத்தவப யம்பரிசம் வன்னியினற்—சுத்திசெயுங்
கன்மமிருட் கேட்டிற் கமலபதஞ் சூட்டுமிதன்
றன்மை யவுத்திரியே[2] தான்.

(இ - ள்.) தமருகமான பறையால் உபதேச தீட்சையும், வாதமாக வீசுங்கையான இச்சையினு லயிக்கியமான[3] யோகதீட்சையும், அபயமான ஞானத்தால் பரிசதீட்சையும், கிரியையான அக்கினியினற் பாசச்சேதனமாகிய சஞ்சிதகட்டமும், சீபாதங்களான ஆதிசத்தியால் ஆணவத்தைக் கெடுத்துத் திருவடிப்பேறு செய்தலுமாகிய ஞான தீட்சையுமுடைய திருக்கூத்தில் சத்தியோ நிருவானமாகிய ஆறுவகைத் தீட்சையும் சிகார மாதியான சூக்குமபஞ்சாக்கரமாய் நிற்கும். உபதேச தீட்சை, யோக தீட்சை, பரிச தீட்சை மூன்றனுள்ளும் சட்சு தீட்சையும், மானததீட்சையும், சாத்திரதீட்சையும் அடங்கும். ௫

(பி - ம்.) 1 ஒத்த துடிபுப தேசம்யோகமே வாதம்,ஒத்த வுபதேச கல்யோக மேவாதம். 2 பவுத்திரியே. 3 மிக்கான.

27. கண்டிலினி தாமுலகு கக்கனசேர்[1] றுய்ச்சிவமாய்க்
கண்டு பிரிவொருகாற் காணுமற்—கொண்டிடுமுன்
ஞதியிருள்[2] கீழிட் டருள்சிவமே லாகநடுப்
போதநிலை நின்றிடுமெய் பூண்டு.

(இ - ள்.) சர்க்கரை போல உருசித்த பிரபஞ்சம் கான்றசோறு போல அருசியாம்; எவ்விடமும் சிவகாட்டமே தோற்றமாய்ப் பொருளுடன் கூடின ஐக்கியம் இரண்டறக் கண்டு, கண்டவைக்கியம் தோற்றுமல் திரோதாயியையும், சிவானுபவ மேலீட்டால் ஆணவத்தையும் கீழ்ப்படுத்தித் தான் பறையிடமாக நின்று வாழ்வான். இதிற் பிரபஞ்சமெல்லாம் சிகாரமாயும், அதனுடைய தோற்றரவு வகாரமாயும், இரண்டற நின்று கண்ட நிலை தானுகவும், சிவமிது அருளிது நாமிதுவென்று பகுப்பற நிறுத்தினது நகாரமாகவும் இவைகளெல்லாம் சிவானுபவ மேலீடாகவே வளர்தல் மகாரமாகவும் சூக்கும பஞ்சாக்கரம் நின்றவா றுணர்க. ௬

(பி - ம்.) 1 கான்ற. 2 ஆதியருள்.

28. சுவைப்பே றளித்தல்[1] சுகவொழிவிற்[2] றோன்றல்
சுகத்தோற்ற மற்ற சுகமே—மிகுத்தநிலை
யாக்கந் திதியழித்த லாதி மறைப்பொருளாற்[3]
சாக்குந் தொழிலைந் துங் காண்.

(இ - ள்.) சிவானுபவ உதயம் சிருட்டியாகவும், அந்த அநுபவத்தை யொருவர் பெறுதல் திதியாகவும், அந்த அநுபவம் ஒருவனை யழித்து உதயமாதல் சங்காரமாகவும், அந்த அநுபவம் பிரிவறத் தோற்றமற்றிருத்தல் திரோபவமாகவும், சுகத்தின் மேலீடே அநுக்கிரகமாகவும், அநுபவத்திற் பஞ்ச கிருத்தியத்திற் சிகாரமாதியாகிய சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு காண்க. ௭

1 றொழித்தல், 2 சுகமழிவிற். 3 மறைப்புப் பொருளாற்.

29. தற்போக்குப் போக்கொருகாற் றுவாமற் றற்பரமாய்
நிற்போதம் போன நிறையுடைமை[1] —முற்போக்



குதய மிவைமறைத்தே யூட்டுதன் மேலும்[2]
புதுமைசெய லைந்தின் பொருள்.

(இ - ள்.) சிவானுபவமாகிய உதயத்தாற் றற்போதம் நட்டமாகத் தன் நிலை யழியாத இவனுக்கு அநுபவத்தைக் கொடுத்தல் வகாரமாகிய சிவானுபூதியாய் அந்தப் பொருளாகியே நின்று அநுபவிக்கிற இவன் பெறுதி நிறையாமல் நிற்பது யகாரமாகவும் இவனுடைய தற்போக்கு இவனுக்குத் தோற்றத்தே நகாரமாகவும் சிகார முதலாகச் சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறுகாண்க. ௮

(பி - ம்.) 1 நிற்போன் போத நிறைவுடைமை. 2 மேன்மேலும்.

30. இன்ப மதில்விளக்க மின்பமதா லின்மைபெறு
மின்பமறைப் பின்பமே வீடிவைக—ளின்பான
வோரெழுத்தி லஞ்செழுத்து மொன்றாக நிற்குமொரு
பேரெழுத்திற் பெற்றிடுமப் பேறு.

(இ - ள்.) சுகமும், சுகத்தோற்றமும், சுகத்துக்குச் சுகமில்லாமலுமே அநுபவிப்பானொருவனைக் காட்டுதலும், அநுபவம் அநுபவிப்பானுக்குத் தோற்றுமல் நிறுத்தலும், சுகத்தின் மேலீடுமிவை ஓரெழுத்தாகிய சிகாரத்தில் அஞ்செழுத்துங் காண்கையால் ஓரெழுத்தாகிய சிகாரத்தைப் பெறுதியாகப் பெறுமிடத்துச் சிகார முதலாகிய சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு உணர்க. ௯

31. நின்ற நிலையே நிலையாய் நகாரமுத
லின்றுமறைப் பற்றுமல நீங்குதலாற்—றன்றுசிவம்[1]
தானு நிலையற் றதுதானற் றப்பொருளே
தானுத லற்றநிலை[2] தான்.

(இ - ள்.) தூலபஞ்சாக்கரம் நின்ற நிலையிலே சூக்கும பஞ்சாக்கரத்தைத் தரிசிக்கும்படி அஞ்செழுத்தையும் தரிசனப்படுகையிலே தெரியாமலே யாக்கின நகாரத்தையும், மலப்போக்கிலே அது தோன்றுமல் நின்ற மகாரத்தையும், சிவானுபவம் பெறுகையில் ஐக்கியத்தாற் பெறுதி நிகழாமல் நின்ற சிகாரத்தையும், அருளிடமாகப் பெற்றோமென்னும் நிலை நிகழாமல் நின்ற வகாரத்தையும், தான் நின்றநுபவிக்கையிலேதான் சற்று நிகழாமற்போன யகாரத்தையும் நகார முதலாக நின்ற தூலத்தைச் சூக்கும பஞ்சாக்கரமாக வுணர்க. ௧௦

(பி - ம்.) 1 நீங்குதலால்-தொன்று சிவம், நீங்குதலா - லென்றுசிவம். 2 வற்றநிலை.

32. நமவமுக்கி யச்சிவமாய் நாப்பண்ணி னிற்க
வமலமூலத் தைக்கே டதாக்க—வெமையளிக்கு
மன்னியவன் முன்னு[1] மறைப் பானவனை நீக்கவிவை
யுன்னலற நிற்பதுதா னென்று.

(இ - ள்.) திரோதாயியையும் ஆணவத்தையுங் கீழ்ப்படுத்தித் தான் சிவமாய் அருளிடத்தே நிற்க, சிகாரம் மகாரத்தை யழிக்க, வகாரம் நகாரத்தை யழிக்க இவைகளிலே போக்கு நிகழாமற் றான் சிவமாய் நிற்பது சிகார முதலான சூக்கும பஞ்சாக்கரம். ௧௧

(பி - ம்.) 1 முன்னை.

33. குன்று முதலெழுத்துக் கூட்டெழுத்துக் கூடியுட[1]
னென்றுய்[2] மொன்றுகா[3] வொற்றெழுத்து—நின்றுந்

தெரியா விலக்கெழுத்துத் தீர்சிதக் காயம்
பிரியா வெழுத்தென் று[4] பேசு.

(இ - ள்.) அனுபவ மேன்மேலும் வளர நிற்பது சிகாரம்; அந்த அனுபவத்தை இவனுக்குக் கூட்டுமது வகாரம்; அனுபவத்துடன் கூடி யொன்றாய்ப் போகினும் அதனைப் பெறுமலே நிற்பது இவனுடைய குணமாதலால் ஒற்றர்களைப் போலே மறைந்து நிற்குமது யகாரம்; முன்னின்ற மறைப்பை விலக்கிச் சிவானுபவத்தையும் பெறுவானையும் பிரித்துக் காணாமல் நிறுத்துவது நகாரம். அந்நகாரத்தையும் நீர்வாகச் சிதக்கெழுத்துப்போல, எழுத்து வடிவு கெட்டாற்போல, சிதக்கென ஒன்று கிடந்தாற்போல, தான் கெடுகையிலும் சித்தங் கெடாத வாணவமாகிய மகாரம் முதலான ஐந்தும் நின்ற வாறுணர்க. க௨

(பி - ம்.) 1 கூட்டிடிபுட. 2 னன்றாயும். 3 ஒன்றுக. 4 என்றே. 5 ஒற்றுட்களை.

34. மெய்யெழுத்திற் றன்வர்க்க மேலெழுத்தா மொன்றுகா[1]
வய்யவிரண் டாகா வுயிரெழுத்து—பொய்யைமறைத்
தீறு மெழுத்துடனே யெய்துமகா[2] ரக்குறுக்கம்
பேறுலே யின்பம் பெறும்.[3]

(இ - ள்.) சத்தியத்தைத் தருவதாகிய சிகாரமும், சிகாரத்திற் றன்வர்க்கமாகிய அருளான வகாரமும் சிவத்துடனே ஒன்றுபடுகையிலே ஒன்றுமாகாமல் இரண்டு மாகாமல் உயிரெனப் பேர்பெற்ற யகாரமும், பெத்தத்தில் பிரபஞ்சத்தைப் பொய்யாக்காமல் மெய்யாக்கி வந்துதான் முத்தியிற் றற்குணம் கெட்ட நகாரமும், சித்தங்குலையாமல் தான் குறுகின்ற மகாரமுமான இவைகளை மெய்யெழுத் தென்றும் தன்வர்க்க மென்றும், ஈற்றெழுத் தென்றும், மகரக்குறுக்க மென்றும் தமிழ் நடையால் அலங்காரஞ் செய்து சிகார முதலான சூக்குமபஞ்சாக்கரம் நின்ற நிலை யுணர்க. க௩

(பி - ம்.) 1 தன்வர்க்க மெய்யெழுத்தா லொன்றுகா. 2 எய்வமக. 3. பெறு.

35. ஓரெழுத்தாய் நாலெழுத்து ளொன்றவிரண் டிற்றேயாய்ப்
பேரெழுத்தாய் நின்று பெருகின்பம்—பாரிறுதி
நாதாதி யுள்ளடக்கி நல்லொளிகூழ் மேவிட்டு
வேதாதி யந்தமாம் வேறு.

[இது சிகார வகார சூக்கும பஞ்சாக்கரம் கூறினது.]

(இ - ள்.) சிகாரமாகிய சிவத்தினுடைய பூரணத்திலே அருளும், ஆன்மாவும், திரோபவமும், ஆணவமுமாகிய நாலெழுத்தும் பூரணமாய் நிற்க, இரண்டிற்றேயாய் யகாரமாகிய ஆன்மாவுடனும் மகாரமாகிய மலத்துடனும் தோயாமல் வகாரமாகிய அருளையும் நகாரமாகிய திரோதாயியையும் தன்னெழுத்தாகக் கூட்டப் பேரெழுத்தாய்ச் சகசொரூபயாய்ப் பிருதிவிமுதல் நாதமீறாகப் பஞ்சகிருத்தியமும் நடத்தி அவைகளுக்கு அப்பாற்பட்டு வேதாந்த வத்துவாய் நிற்பது சிகாரம். க௪

36. சைவா கமமிருபத் தெட்டுஞ் சதாசிவத்தி
னவ்வாறே யைந்துமுகத் தாங்குளவா—மிவ்வாறே
யீசானத் தெட்டிருபத் தீரிரண்டு மாமுகத்தாம்
பேசாய் சிகாரமுதற் பெற்று.[1]

(இ - ள்.) சதாசிவ நாயகனாது ஈசானாதி பஞ்சமுகங்களினும் இருபத்தெட்டாகமங்களும் தோன்றின. அவை சத்தியோசாத முகத்திற் றோன்றின வாகமம் அஞ்சு, வாம

முகத்திற் றோன்றியது அஞ்சு, அகோர முகத்திற் றோன்றியது அஞ்சு, தற்புருட முகத்திற் றோன்றிய ஆகமம் அஞ்சு, ஈசான முகத்திற் றோன்றிய ஆகமம் எட்டு; ஆக இருபத்தெட்டும் தோன்றின ஈசானதியாக, சிகாரமுதல் சூக்கும பஞ்சாக்கரம் ஐந்தும் நின்றதாக. ஞானபாதம் பெறுகைக் கேதுவாகவே யருளிச்செய்கையால் சிகாரம் முதல் நின்றது சூக்கும பஞ்சாக்கரம் என்று உணர்க. க௫

(பி - ம்.) 1 பேறு.

சூக்கும பஞ்சாக்கரம் முற்றும்.

---

சீவன்முத்தர் ஞானபூசைக் கிரமம்[1]

37. ஒன்றே சிவானுபவ மோரெழுத்தா லுற்றிடுவ[2]
தொன்றே கொடுத்திடுவ தோரெழுத்தங்—கொன்றேதான்
ஓரெழுத்தின் பேறொன்றே[3] வோரெழுத்துத் தான்மறைப்ப
தோரெழுத்துப் போம்போக்கொன் றே.

[இது பஞ்சாக்கர பலம் சொன்னது].

(இ - ள்.) சிகாரம் அனுபவத்தைத் தருவதொரு வகையாக அமைவு பெறுதாகியும் வகாரம் அனுபவத்தைக் கொடுப்பதொரு தன்மைத் தல்லவாகவும், நகாரம் தான் அனுபவத்தையும் இவனையும் தெரியாமல் நிறுத்த வொருதன்மைத் தல்லவாகவும், மகாரம் தான் கெட்டு மேன்மேலும் அனுபூதி விளைத்துத் தற்கேடே நித்தமாகப் போவதொரு தன்மைத்தல்லவாகவும் ஞானவான்கள் இம்முறையே உபாதி சூனியம் பிறந்த விடத்திலே யனுபவிப்பார்கள். ௧

(பி - ம்.) 1 இதுமுதல் அரிய பஞ்சாக்கரமென்று அச்சுப் பிரதியிற் காணப்படுகிறது. 2 உற்றிடுவ. 3 பேறென்றே.

38. வாக்கிறந்த பேரின்ப வாசகமா மஞ்செழுத்து
நோக்கியனு போக நுகர்வார்கள்—நீக்கியவா
றத்துவாவின் மந்திரங்க ளன்றியரு ளஞ்செழுத்தா
னித்தமுத லாசரிப்பர் நின்று.

(இ - ள்.) வாக்கு மனாதீதமாகிய வாசகமா மஞ்செழுத்தும் தரிசித்து அனுபூதியிலே நிற்பார்கள் வாசனாபோதம் அறும்வகைக்கு நித்தியகன்மம் முதலானவை யாசரிக்கும் பொழுது. சத்தியோ நிருவாண தீட்சைபுட் சுத்தி செய்த ஆறத்துவாக்களுக்கு ஒன்றாகிய பஞ்சப்பிரம சடங்கங்களை உபாதியாக்கிச் சுத்தபஞ்சாக்கரத்தால் நித்தியகன்மம் முதலானவை ஆசரிப்பார்கள்.[1] ௨

1 பஞ்சாக்கர செபம் பண்ணினால் வாசனாமலம் போம். சி. போ. ௯. 3 சூர்.

39. அழிப்புறுபே ரின்ப வதீதநிலை நீங்கி
விழித்துப் பரையாம் வெளியில்—ஒழிப்பறவே
தம்மை யுலகோர் தமைக்காணு வண்ணம்போ
யம்மலமுன் சுத்திசெய்வா ராங்கு.[1]

(இ - ள்.) தான் அழியப்பெற்ற சுகாதீத நிலையாகிய ஆனந்தவனந்தலைப் பரையிலே விழித்து, அந்தப் பரையாகிய வெளியிலே தன்னைத் தன்னாலும் பிறராலும் காணாவண்ணம் தற்போக்கையுடையாராய் அருள் மேவிட்டு மலத்திரயங்களை யொழிப்பது ஆசமனமாம்.[2] ௩

(பி - ம்.) 1 தம்மைபுல கோர்தம்மிற் காணுத வண்ணம்போய்—அம்மலமுஞ் சுத்தி செய்வதாங்கு; தம்மை புலகோர் தம்மிற் காணுதவணம்—பொய்ம்மலமுஞ் சுத்தி செய்வதாங்கு 2 சௌசம்.

40. விடமல நீர்சிவமாம் வெள்ளவிதி[1] நீராடி
நீடுபரை யாங்கற்ப நீறுடி—நாடியதன்[2]
னிச்சைமுதன் மூன்றருளி னிச்சைமுதல் மூன்றுப்த்தீர்த்
தச்சலஞ்செய் மூர்த்திகம வற்று.

(இ - ள்.) வாதனுபோத வொழிவே மலஸ்நானமாகவும், சிவானுபூதியிலே மூழ்கி யழுந்துவதே விதி ஸ்நானமாகவும், பரையினுடைய நிலை தனக்குத் தனுவாகக் கற்பிக்குகிய பஸ்மத்தி லழிவதே பஸ்மஸ்நானமாகவும் செய்து, தன்னுடைய இச்சா ஞானக்கிரியை சிவனுடைய இச்சாஞானக் கிரியையில் அழிவதே அத்திர சலமாக வெண்ணிப் புரோக்கணம் பண்ணி சமவான திரோபவத்தையும் மலத்தையும் போக்குவதே தீர்த்திமூர்த்தி பண்ணுவதாம். ௪

(பி - ம்.) 1 வெள்ளவித. 2 ஆடியதன்.

41. தத்துவங்கண் மூன்றிற் றாணி முதன்[1] மாயை
சுத்தமுதன் மூன்றிரண்டு சுத்தியாய்ப்—பெத்தநிலை
யஞ்செழுத்தா லாசமனஞ் செய்துபிரா[2] ணாயாம
மஞ்செழுத்தாற் செய்திடுவ தாய்ந்து.

(இ - ள்.) தத்துவத் திரயங்களாகிய பிருதிவி முதலாகிய ஆன்ம தத்துவம் இருபத்து நாலும் மாயை முடிவான கலாதத்துவ மேழும் சுத்தவித்தை முதலான சிவதத்துவமைந்தும் இந்த முப்பத்தாறும் சுத்தியாகத் தக்கதாக பேதமாகிய தத்துவக் கட்டைச் சுத்த பஞ்சாக்கரத்தால் ஆசமனம்செய்து பிரணவத்தாற் பிராணுயாமம் செய்க. தற்போக்கும் சிவவுதயமுமாகிய இரேசக பூரகஞ்செய்து பிரணவமாய்த் அக்ஷரீதமாகிய சிவத்தை இரண்டறக் கலப்பது கும்பகமாம். ௫

(பி - ம்.) 1 முதலா. 2 செய்பிராணுயாம. 3 சுத்திவாத்தக்கதாக.

42. அத்திரங்க ளஞ்சமா[1] மஞ்செழுத்தா லேகாங்கள்
சுத்திசெய்தீ சாஞதி சூழுங்கி[2] —மொய்த்தவெழுத்
தஞ்சாற் காங்களுட னங்கவியா தஞ்செய்தல்[3]
கஞ்சாலே சந்திநினை யாங்கு.

(இ - ள்.) ஐவகை யத்திரங்களுக்கும் ஆதாரமான இச்சா ஞானக் கிரியைகளைக் கொண்டு பஞ்சாக்கரத்திற் றரிசித்த முறையே காசுத்திபண்ணி ஈசானுதியும் அங்கன்களும் பெத்த பஞ்சாக்கரத்தின் நின்ற முறைமையைச் சுத்த பஞ்சாக்கரமாக மாறி கரநியாசம் அங்க நியாசங்களைச்செய்து, காலங்கடந்த பஞ்சாக்கர நிலையைச் சந்தினாகத் தியானிப்பன். ௬

(பி - ம்.) 1 உளைக்குமா. 2 சூழ்கமுய்த்த. 3 செய்தலஞ்சாலே.

43. சந்திகண்மூன் றற்றேக சந்திபரை யேகரியாய்ப்
புந்திசெய்தெக் காலுமொரு போதாக—வந்த
நியாதமுத லஞ்செழுத்தி னீர்கொண்டு கும்ப
தியானகரத் தான்மேற் றெளி.



(இ - ள்.) மூன்று காலங்களினின்ற சந்தி தேவதைகளின்றியே போக்குவரவற்றும் பூரணமாய் நின்ற பரையாகிய சிவசத்தியே ஏகசந்தியாக சாட்சியாக நினைந்து எப்பொழுதும் ஒரு காலமாகத் தியானித்து அங்கநியாசஞ்செய்து பஞ்சாக்கரமாகிய அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்தாலாகிய கும்பசலத்தாற் கும்பாபிடேகம் பண்ணிக் கொள்வாயாக. ௭

44. மாற்சன மாக நகார மறைப்பற்று
மேற்சனனந் தீரிருளை வீட்டியதன்—பாற்செல்
லகமருட ணஞ்செய் தருண்மண் டலத்திற்
றகுசிவற் கர்க்கியஞ்செய் தாழ்ந்து.[1]

(இ - ள்.) திரோபவ மறைப்பாகிய நகாரத்தை யொழித்து அருளிலே நிற்பது மார்ச்சனமாகவும், செனன ஏதுவான ஆணவத்தைச் சிவவுதயத்தாற் கெடுத்தது அகமருடணஸ்நானமாகவுங் கொண்டு, அருண்மண்டலமாகிய பரையிலே உதயமாயுள்ள சிவனுக்கு அர்க்கியாஞ்சலியாதத் தான் கீழ்ப்பட்டு அந்தச் சிவன் மேற்பட்டு நிற்பது சிவனுக்கு அர்க்கியம் கொடுக்கு முறைமை யென்பதாம். ௮

(பி - ம்.) 1 தகுசிவற் கஞ்சலிஞ்செய் தாழ்ந்து.

45. ஆசி லருள்வடிவே யானசக ளீகரணம்
பூசைதனக் கஞ்செழுத்தாற் போற்றிசெய்து—பேசாப்
பிரணவஞ்சே ரஞ்செழுத்தாற் பின்பர்க் கியஞ்செய்
தரனருளா[1] கத்தெளிப்பா யாங்கு.

(இ - ள்.) தூலதேகமும் சூக்குமதேகமும் மந்திரதேகமு மற ஞானமே வடிவமாகச் சகளீகாணஞ் செய்து, சிவார்ச்சனை செய்வான், பிரணவத்திற் பெத்தபஞ்சாக்கரம் மாறி முத்திபஞ்சாக்கரம் நின்ற நிலையே அர்க்கியம் தாபித்து, அந்த ஞான ஜலத்தாலே அவ்விடமும் சிவபரிபூரணமாகப் புரோட்சிப்பான். ௯

(பி - ம்.) 1 அருளேயாய்த் தெளி.

46. அவனிமுத லாதாந்த மஞ்செழுத்து[1] னின்ற
சுவடு துவாரமதாய்த் தோன்ற—அவைசிவமாம்[2]
எங்கும் பரையாந் துவாரத்தி லெய்திடுவா
ரங்குகம விக்கினங்க ளற்று.

(இ - ள்.) பிருதுவிமுதல் நாதமீறுகப் பஞ்சாக்கரத்துக்குள் அடங்கிநின்ற நிலையைத் தானமாக்கி, இந்தத் தத்துவங்களை நாட்டிக் கழற்றியே துவாரத்தைப் பிரவேசிப்பதாக நினைந்து பரையாகிய துவாரத்திற் புகுந்து அஞ்செழுத்தாகிய பஞ்சாக்கர நிறைந்த கும்ப ஜலத்தாற் கும்பாபிடேகம் பண்ணிக்கொள்வதனுல் திரோபவமும் மலமுமாகிய விக்கினங்களைப் போக்கி நிற்பார்கள். ௰

(பி - ம்.) 1 அஞ்செழுத்தால். 2 தோன்று மவைதரிசித்து.

47. முத்தி நிலையளிக்கு முற்பரையாம் வாயிலிடை
யத்திரமா மிச்சாஞா[1] னக்கிரியைச்[2] —சத்திகளை
யேத்திகம வாத்து பதிப்பிரமற்[3] கெட்டாத
வாத்துபதி யைப்பணிந்து வாழ்[4] .

(இ - ள்.) மோட்ச வாயிலைத் தந்த பரையாகிய வாயிலுள் இச்சா ஞானக் கிரியா சத்திகளை வழிபட்டு நகார மகாரமாகிய திரோபவத்தையும் ஆணவத்தையும் பிரியாத வாத்துபதிப் பிரமனுக்கும்[5] எட்டாத ஞானபூமியாகிய வாத்துபதியை யர்ச்சிப்பாய். ௧௧

(பி - ம்.) 1 அந்திரமா யிச்சா, 2 ரிஷா. 3 மேலாம் பிராமணனுக் 4 வாழ்த்து. 5. பிராமணனுக்கும்.

48. சித்தாந்த மோரிருபத் தெட்டுஞ் சிகாரமுதல்
வைத்தாரை யஞ்செழுத்தால் வந்தித்துச்[1] —அந்தமா
மஞ்சா மெழுத்தால் நிவர்த்திகலை யாதிகழித்[2]
தெஞ்சா நடம்போ யிறைஞ்சு.

(எ - து.) சிவாகமம் இருபத்தெட்டையும் ஈசானாதி பஞ்சமுகங்களினும் அருளிச்செய்தும் சிகார முதலாகிய சூக்கும பஞ்சாக்கரத்தை யனுக்கிரகித்தவனுமான ஆதி குருவாகிய சதாசிவ மூர்த்தியைச் சுத்த பஞ்சாக்கரத்தாலே நியசித்து,[3] நிவிருத்தியாதி பஞ்ச கலைகளிற் சஞ்சித கன்மத்தைச் சுத்த பஞ்சாக்கரத்தாலே தகிசித்து, பூதசுத்தி பண்ணி முன் சொன்ன பஞ்சாக்கரமான திருக்கூத்தில் இரண்டற நிற்குமதே அந்தர்யாக பூசையாம். ௪௮

(பி - ம்) 1 வஞ்சித்து. 2 ஆதியழித்து. 3 அர்ச்சித்து.

49. தூயவெழுத் தாலடுந் தூக்கியதா ணேக்கியழி[1]
வாயநிலை யந்தரியா கஞ்செய்தே—மேயவெழுத்
தஞ்சால் விசேடார்க் கியஞ்செய் திரவியங்க
ளஞ்சாலே சுத்திசெய்வா யாங்கு.

(இ - ள்.) சுத்த பஞ்சாக்கரத்திலே முதலெழுத்தாஞ் சிகாரமாகிய விபூதியே[2] திருக்கூத்தாகக் கண்டு பூசைசெய்வதே அந்தர்யாக பூசையாக்கி அச்சுத்த பஞ்சாக்கரத்தாலே விசேடார்க்கியம் கற்பித்துப் பிரபஞ்ச முழுதுஞ் சுத்த பஞ்சாக்கரமாகக் காணு மதுவே திரவிய சுத்தி. ௪௯

(பி - ம்.) 1 நோக்கியதே யாய. 2 அனுபூதியே.

50. ஆனந்த மூலத்தை[1] யன்பெழுத்தே யற்புரிய
வானந்தி பூசைசெய வவ்விரண்டுந்—தானந்த
மாகவதி லோவாத வர்ச்சனையா லான்மாவுக்
காகவரு சுத்திசெய்வ தாங்கு.[2]

(இ - ள்.) ஆனந்த மூலமாகிய[3] சிவனை இரண்டா மெழுத்தாகிய அருளாலே யேவல் செய்ய, ஆனந்தியாகிய வான்மா மாண்டு, அற ஐக்கியம் பிரவேசிப்பதே, சிவபூஜையாக, [4] நகார மகாரங்களாகிய விக்கினங்களைக் கெடுத்து, ஒழியாத ஐக்கியமாகிய சிவோகம் பாவனையே ஆன்மசுத்தி. ௫௦

(பி - ம்.) 1 மூலத்தே. 2 ஆகவரு சுத்திசெய்யா யாங்கு, ஆகவருஞ் சுத்தி செய்யா யாங்கு. 3 முதலாகிய. 4 இரண்டற வசிக்கும் பிறப்பதே.

51. மூவைந்து தூலத்தின் மூவைந்து சூக்குமத்தின்
மேவைந் தெழுத்தின் விதிப்படியே—நாவொன்றச்
சொல்லாத வைந்தெழுத்தின் சுத்தியென வைந்துமற
நில்லா நிலையாநி நில்.

(எ - து.) பதினைந்து வகையாகிய தூல பஞ்சாக்கரத்தைப் பதினைந்து சூக்கும பஞ்சாக்கரத்தின் பொருளாகவே வேறுபாடற வுணர்ந்து நாவாற் சொல்லாமல் அறிவாற் பஞ்சாக்கரத்தை யனுபவிப்பதே மந்திரசுத்தியாக நில்லா நிலையில் நிற்பாயாக. ௫௧

52. நுன்றமிலா னிச்சை யுருவாகி[1] யைந்தொழிலி
னின்றநிலை மாலியத்தை நீக்கியவ—னென்றும்
பரையா லனுபவத்தைப் பண்ணுநமப் பாழா
முரையா லிலிங்கசுத்தி யோது.



(இ - ள்.) ஒரு உபாதிகளு மற்று நின்மலயச் சுகசொரூபியாயுள்ள சிவனென் வடிவொழித்தற் பொருட்டு வடிவாகிய பஞ்சகிருத்தியங்களைப் பண்ணினன் இவனுக்கு இந்த பஞ்சகிருத்தியமே நின்மாலியமென்று பரியுசித பூசையாகச் சிவனுடன் ஐக்கியம் பண்ணி நின்மாலியத்தை நீக்கியவன் பறையிடத்தே நம்மை வைத்து அனுபவத்தைத் தருவதே நகார மகாரங்களுக்கு எட்டாததாய[2] இலிங்க சுத்தியாம். ௫௨

(பி - ம்.) 1 உருவாக்கி. 2 கேடாவதாய.

53. அங்கஞ் செழுத்தானு மானைஞ் சமுதஞ்சு
தங்குமழி வாமஞ்[1] சனைஞ்செய்து—மங்கியிடுந்
தன்வா தனைமாற வொற்றுடை சாத்தியுவ்வா
மென்மாசி லாசனத்தி லேற்று.

(இ - ள்.) சுத்த பஞ்சாக்கரத்தால் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் இவைகளையும், தன்னழிவே திருமஞ்சனமுமாகவும் செய்து பிரபஞ்ச வாதனை தனக்குக்கெட திரு ஒற்றுடை சாத்தி உகாரமாகிய ஆன்மாவிலே சிவாசனமாக எழுந்தருளப் பண்ணுவது. ௫௩

(பி - ம்.) 1. தங்குவழியா.

54. ஆதார சத்திமுத னாதாந்த வஞ்செழுத்தின்
மீதான வாசனத்தை[1] வெவ்வேறு—சோதனையிற்
றன்னுணர்வாற் கண்டேயுந் தானுணர்ந்த ஞானத்தை
யுன்னுமதே மூர்த்தமதா[2] யோது.

(இ - ள்.) ஆதார சத்தி முதலாக நாதமிறுதியாகக் கீழ்ப்படுத்தின ஆன்ம வாசனமாகிய பஞ்சாக்கரத்தின் அனுசந்தானத்துடனே நிற்கின்றதான இவைகள் யாவையுங் கண்டு சேடமென்று நீக்கித் தன்னிடத்தில் உதயமாகிய ஞானத்தைச் சிவமூர்த்தியாகக் கற்பிப்பான். ௫௪

(பி - ம்.) 1 ஆதனத்தின். 2 அர்த்தமதா.

55. முன்னெழுத்தா மானந்த மூலத்தை யாவாகித்
துன்னுநிலை தானேக்க மொன்றுபட—வென்னவருந்
தாபனமே யாதிசெய்து தானந்த மாதிமல
சாபரண மாதிகளா யாக்கு.

(இ - ள்.) முன்னெழுத்தாகிய சிகாரமாகிய வானந்தத்தை மூலமாக எவ்விடமும் பூரணமாக இரண்டறக் காண்பதே யாவாகனமாகத் தியானித்து, அவனுடைய நித்தியத்தையும், தனக்கே இலாபமாக்கி நின்றதன்னையும் பாசத்தையும் தன்னுடனே இரண்டற்ற வைக்கியத்தையும் தாபன சன்னிதான சன்னிரோதனமுமாகச்செய்து தன்னையே சுகந்தம் புட்பம், வத்திரம் ஆபரண முதலானதாகவும் தூபதீபாதிகளாகவும் பஞ்சாக்கரத்தாற் கொடுப்பன். ௫௫

56. தன்னறிவே நைவேத்யம் தன்னறிவே பானியந்
தன்னறிவே தாம்பூலந் தானாக—முன்னருளே
வாய்த்தமுக வாச மணிசிவய[1] தூபாதி
தீர்த்தநம வென்றுணர்வாற் செய்.

(இ - ள்.) ஆன்ம நிவேதனமே நைவேத்தியமும் பானியமுந் தாம்பூலமுமாக நிவேதித்து அருளாகிய முகவாச வுண்டையாற் றிருவாய் மாற்றி, சிகாரம் மணியாக்கி, வகாரமும் யகாரமும் தூபாதியாகவும், நகார மகாரமான தீர்த்தத்தையுஞ் சேர்ப்பாய். ௫௬

(பி - ம்.) 1 மணிசிவமாய்.

57. நீராஞ் சனமெய்ந் நிறைவு பரைநீறு
பாரார்கண் ணுடியுயிர் பற்றுகுடை—சேருமறைப்[1]

போச்ச கவரி யுடனால வட்டமுதல்
வாச்சமலக் கேடாக வை.

(இ - ள்.) சிவனுடைய பூரணத்தின் நிறைவு திருவாலத்தி, பரை திருநீற்றுக்காப்பு, ஆன்மாவிடத்திலே சிவவுதயம் திருக்கண்ணாடி, சிவத்தோற்றம் ஒழியப் பிரபஞ்ச மறைப்பு திருக்கொற்றக் குடையுந் திருவெண்சாமரையுந் திருவாலவட்டமும் பாசச் சேதனம். ௨௧

(பி - ம்.) 1 தோராமை போச்ச.

58. பாத்தியநீர் தானுய்ப் பரையா சமனமாய்
மூர்த்திசிவ மர்க்கியமாய் முன்னைமல—நீத்திறைஞ்சி
யெண்ணியுரு[1] வஞ்செழுத்து மெண்ணியிறைக் கீய்ந்துவலம்
பண்ணருளில் வீழ்ந்து பணி.

(இ - ள்.) ஆன்மபாவம் கெடத் திருவடியிலே அபிக்கம் பண்ணுதல் பாத்தியமாகவும் பராசக்தி நிலையே யாசமனமாகவும், சுசொரூபமே யர்க்கியமாகவும் கொடுத்து நகார மகாரங்கள் கெட நமக்காரஞ் செய்து நாறு அருயிர முருவாகவே பஞ்சாக்கரத்தைச் செபித்துச் செபத்தையுந் தன்னையுஞ் சிவனுக்குக் கொடுத்துப் பிரதக்கணம் பண்ணி நமக்கரிப்பாய். ௨௨

(பி - ம்.) 1 வெண்ணி திரு.

59. குண்டலியாங் குண்டத்துக் கூடுபரை யக்கினியி
லண்டனுக்குத் தன்னழிவே யாகுதியாத்—தொண்டுசெய்து
சென்றளித்துத் தற்சுத்தி செய்தல் பவித்திரந்தா
னென்றிறைஞ்சா யட்டமல ரிட்டு.

(இ - ள்.) வித்துத்தானமாகிய வக்கினி குண்டத்துப் பரையாகிய அக்கினியினிடத்திலே தற்போக்காகிய வழிவே சிவனுக்காகுதியாகச் சுத்த பஞ்சாக்கரத்தாற் செய்து ஓம பலத்தைச் சிவனுக்கு நிவேதித்துத் தான் அறநிற்றலே திருப்பவுத்திரமாகச் சாத்தி அட்டபுட்பமாகவுஞ் சாத்துவாய். ௨௩

60. அஞ்செழுத்தா லட்டமல ரிட்டிறைஞ்சிப் பூரணமா
மஞ்செழுத்தான் மூர்த்திசெய்தே யாதரித்து—நெஞ்சுருகி
ஞானகுருத் தாளிணையி னுண்மலரிட் டர்ச்சித்தால்
ஞானநெறி யர்ச்சனையா நன்கு.

(இ - ள்.) பஞ்சாக்கரத்தால் அட்டபுட்பம் சாத்தி நமக்கரித்து பூரணமாய்ப் போக்கு வரவற்று சுத்த பஞ்சாக்கரத்தாலே சிவனை மூர்த்தி பண்ணி பத்தியினால் உள்ள முருகி ஞானசாரியனை நமக்கரித்து அர்ச்சிப்பது ஞான பூசையாம். ௨௪

சீவன்முத்தர் ஞானபூசைக் கிரமம் முற்றும்.

---

### உரையாசிரியர் வாழ்த்துரை

காழிநகர் வாழி கவுணியர்கோன் மூன்வாழி
வாழியருட் கண்ணுடைய வள்ளல்தான்—எழிலைசையின்
தெய்வத் தமிழ்ப்பாடல் வாழி திருநெறியாஞ்
சைவத் தவர்வாழி தான்.

சென்னை-600 002. 187/63

# திருவீழிமிழலையில் சமாஜத் தொண்டு

1-1-1932 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஷை யூரார்களின் ஆதரவின்பேரில் சுமார் 200 பேர் கோவிலுக்கு எதிரிலுள்ள மண்டபத்தில் கூடினர். அப்பொழுது திரு. S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் (சித்தூர் பாடசாலைத் தலைமை ஆசிரியர்) "சைவசமயத்தின் தற்கால நிலைமை"யைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். சமய உணர்ச்சி அவசியம் வேண்டியதென்றும் அதைப் பெருக்கத்தக்க வழிகள் யாவையென்பதையும் விளக்கினார்கள். பின் திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள் (குடவாயில் போர்டு பாடசாலைத் தலைமை ஆசிரியர்) நால்வர் காட்டிய நெறியைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிவித்தார். அப்பர் சம்பந்தரின் கூட்டும், அவர்கள் செய்த பல அற்புதங்களும் விளக்கப்பட்டன. பின்னர் அவ்வூரார் தக்க பெரியார்களைத் தலைவர், உதவித் தலைவர், காரியதரிசி முதலிய பதவிகளுக்குத் தெரிவுசெய்து சமாஜக் கிளையாகப் பதிவு செய்வதாக ஒப்புக்கொண்டபின் ஆரவார முழக்கத்துடன் கூட்டம் முடிந்தது.

---

## எண்கண்ணில் சமாஜத் தொண்டு

முருகனுக்குகந்த கோயில்களில் ஒன்றாகிய எண்கண்ணில் தைப்பூசத்தன்று தேரும் தீர்த்தமும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டன. மறுநாட்காலை 10 மணிக்கு அவ்வூர்ப் பெரியாரும் ஏனையோரும் பெருந்திரளாகக் கூடினர். வேடம்பூர் தமிழறிஞர் க. ஐயாறு பிள்ளை சைவசமயத்தைப் பற்றியும், ஆலங்குடி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை "சிவபக்தி" என்பதைப் பற்றியும், குடவாயிலிலுள்ள சாமி. வேலாயுதம் பிள்ளை "நாம் உய்யும் வழிகள்" என்பதைப் பற்றியும் மிகவும் ஆர்வத்துடன் நெடும்பொழுது பேசினர். அப்பொழுது அவ்வூரில் பெரும் புகழ் கொண்ட தமிழ்ப்பெரும் புலவர் வேங்கடாசல முதலியார் தலைமையில் ஒரு கிளைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதில் 15 பெரியார்கள் வாரம் இருமுறை கூட்டமாகக் கோயில் வழிபாடு செய்வதாக (அத்திக்குடியில் ஏற்பட்டிருப்பதைப் போல்) ஒப்பின பின் ஷை முதலியார் எண்கண் கோயிற் பெருமையை மிக அழகாகவும் கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய் விளக்கினர். கடைசியாக அன்னார் மகனார் வாழ்த்துக்கூற ஆரவார முழக்கத்துடன் மாலை நாலுமணிக்குக் கூட்டம் கலைந்தது. யாவரும் பெரிய உற்சாகத்துடன் விளங்கினர்.

---

## மதுரையில் சைவசித்தாந்த மகா சமாஜக் கிளை ஸ்தாபனம்

3-1-32 மாலை 6 மணிக்கு E. M. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களின் கோபால் மஹாலில் ஒரு கூட்டம் கூட்டப்பெற்றது. வித்வான் மதுரை சுந்தரபாண்டிய ஓதுவா மூர்த்திகள், 'சைவசமயத்தை இக்கால நெருக்கடியில் ஆங்காங்கு பரப்பவேண்டுவதற்கு சமாஜ ஸ்தாபனங்கள் அவசியம்; சிவ இராஜதானியாகிய இம்மதுரையம்பதியிலும் ஒருசமாஜக்கிளைவேண்டும்; அதனை ஸ்தாபிக்கக் கோருகிறேன்' என்று தெரிவித்தார். அப்பொழுதே 'மதுரை சைவசித்தாந்த சமாஜம்' எனச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கலாயிற்று. அதன் உத்தியோகஸ்தர்கள் பின்வருவோராவர்:—தலைவர்: திரு. K. கோதண்டபாணிப் பிள்ளை, B.A. அவர்கள், உஜூர் சிரஸ்தார், ஜில்லா கலெக்டராபீஸ் மதுரை; உதவித் தலைவர்கள்: 1. திரு. டாக்டர் K. R. சுப்பிரமணிய ஐயர், மதுரை; 2. திரு. E. M. கோபால கிருஷ்ணக்கோனார், மதுரை; 3. திரு. வித்வான் மதுரை சுந்தரபாண்டிய ஓதுவா மூர்த்தி, மதுரை; அமைச்சர்கள்: 1. திரு. J. M. சோமசுந்தரம்பிள்ளை, B. A., B. L., அவர்கள், சூப்பிரண்டெண்டு, அழகர் கோயில் தேவஸ்தானம், மதுரை; 2. திரு. M. L. இராமசாமிப் பிள்ளையவர்கள், ஓவர்ஸியர், இந்து பிராவிடெண்டு பர்மெனெண்டு பண்டாபீஸ், மதுரை; பொருப்பாளர்கள்: 1. திரு. ராவ்சாஹேப் கதிரைவேற்பிள்ளையவர்கள், செக்கரிட்டெரி டிஸ்டிரிக்போர்டு, மதுரை; 2. திரு. S. நாகசுந்தரம்பிள்ளை B. A., B. L., அவர்கள், டிஸ்டிரிக் எலக்ஷன் ஆபீஸர், மதுரை; 3. திரு. ராம. மெ. சித. வைரவன் செட்டியார், தேவகோட்டை; 4. திரு. நி. அ. க. அ. இராமநாத செட்டியார், மதுரை தேவஸ்தானக் கமிட்டி மெம்பர், தேவகோட்டை; 5. திரு. J.N. இராமநாதன் அவர்கள், மதுரை. இச்சமாஜத்தின் முதல் நான்கு சொற்பொழிவுகளை வித்வான் மதுரை சுந்தரபாண்டிய ஓதுவா மூர்த்தி அவர்கள் "மதுரையின் வரலாறு" என்பது பற்றி ஆராய்ச்சி கிரமப ஜனவரி மீ 11, 19, 24, 31-ம் தேதிகளில் நடத்தினார்கள்.

சென்னைச் சித்தாந்தப் பிரகாசசபை 26-1-1932ல் திரு. பா. வே. மாணிக்கநாய்க்கரின் பிரிவாற்றாமைபற்றிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 2.

# ஆங்கிலமறிந்த ஆன்றோர் பணி

தூத்துக்குடியில் நடந்த ஆண்டு நிறைவிழாவில் ஆங்கிலமறிந்த தமிழ்ப் பெரியார்கள் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றுள்ள அரிய நூல்களின் அரிய பகுதிகளைத் தமிழில் மொழி பெயர்த்து உதவி புரிதல் வேண்டுமென்றும், அறிவியல் முடிபுகளைச் சமயத்துறையில் வைத்து ஒப்பிட்டு ஆஸ்திக உணர்ச்சி வேரூன்றுவதற்குரிய அறிவியல் உண்மைகளைத் தொகுத்துக் கூறும் அரிய நூல்கள் பல மேல்நாட்டினரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளனவென்றும், அவைகளைப் பயின்று முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருதல் முதல் முதல் மேற்கூறிய அன்பர்கள் செய்யவேண்டிய பணியாகுமென்றும் நாம் கூறியது அன்பர்கட்கு ஞாபகமிருக்கும். அவ்விழாவிலேயே சில நூல்களின் பெயரும் ஆசிரியர்கள் பெயரும் கொடுக்கப்பட்டன. இப்போது அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் கீழே குறிக்கிறோம். எஞ்சியவற்றை அடுத்த இதழில் குறிக்க எதிர்பார்க்கிறோம். பல அன்பர்கள் நமக்கு எழுதியவுடன் அவர்கட்கு அவ்வப்போது இந்நூற்பட்டியை அனுப்ப இயலாமைக்குப் பெரிதும் வருந்துகிறோம். கீழ்வரும் புத்தகங்களில் எதிலும் விலை குறிக்கப்படவில்லை. இப்புத்தகங்களெல்லாம் சென்னைச் சர்வகலாசாலைப் புத்தகசாலையிற் கிடைக்கும்.

| *Name of Book* | *Name of Author* | *Publishers* | *Year of Edition* |
|---|---|---|---|
| 1. A Students' Philosophy of Religion. | W. K. Wright. | Hodder & Stoughton | 1922 |
| 2. Evolution and Creation. | Sir Oliver Lodge. | Do. | 1926 |
| 3. The Roots of Religion in the Human Soul. | J. Baillie. | Do. | 1926 |
| 4. Ultimate Values. | J. S. Mackenzie. | Do. | 1924 |
| 5. Cosmic Problems. | Do. | Macmillan & Co. | |
| 6. Reality. | Canon Streeter. | Do. | |
| 7. The Faith of a Moralist. | A. E. Taylor. | Do. | 1930 |
| 8. Space, Time and Diety (2 Vols.) | S. Alexander. | Do. | 1920 |
| 9. Creative Evolution. | Bergson. | Do. | 1914 |
| 10. Development and Purpose. | L. T. Hobhouse. | Do. | 1927 |
| 11. Process and Reality. | A. N. Whitehead. | Cambridge University Press | 1929 |
| 12. Religion in the making. | Do. | Do. | 1926 |
| 13. Science and the modern world. | Do. | Do. | 1926 |
| 14. Concept of Nature. | Do. | Do. | 1920 |
| 15. The Universe around us. | J. H. Jeans. | Do. | |
| 16. On the Nature of the Physical world. | A. S. Eddington. | Do. | |
| 17. Purposive Evolution. | E. Noble. | Allen & Unwin | |
| 18. Spirit in Evolution from Amoeba to Saint. | Standing. | Do. | |
| 19. Personality and Reality. | J. E. Turner. | Do. | 1926 |
| 20. Nature of Diety. | Do. | Do. | 1927 |

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-2-1932.

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.